# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 07 அதிர்வு 82 சித்திரை 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162




## அரசே..! அகதிகள் குற்றவாளிகள் அல்லர்










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day
bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# விருதே, உன் விலை என்ன?

உயரிய அங்கீகாரமாகவும், அடுத்தக்கட்டம் நோக்கி பயணிப்பதற்கான ஊக்கியாகவும் அமையவேண்டிய விருதானது இன்று வியாபாரப் பண்டமாகிவிட்டது என்பது வெட்கி தலைகுனிய வேண்டிய விடயமா-கும். எங்கேயும், எப்போதும் யாராலும் விருதுகளை வழங்கவும், வாங்கவும் முடியும் என்றநிலை புலம்பெயர் தேசத்தில் ஏற்பட்டுள்ளது.

சாதனையாளர்களுக்கும், உண்மையான திறமையாளர்களுக்கும், முயற்சியாளர்களுக்கும் வழங்கப்படும் விருதுகள் பற்றி எவருக்கும் எவ்வித பிரச்சினையும் இருப்பதில்லை. அத்தகைய தகுதியானோருக்கு விருது வழங்கப்பட்டால், அனைவரும் வாழ்த்தி வரவேற்கவும் செய்வர். ஆனால் உயரிய விருதை விளையாட்டு பொருளாகக் கருதி, வியாபாரப் பண்டமாக்குவோர் மீது என்றோ ஒருநாள் காலம் காறித்துப்பும்.

தற்பெருமைக்காக ஒரு அமைப்பைத் தொடங்குவதும், அந்த அமைப்பை விளம்பரப்படுத்த நான்கு பேரை வளைத்து போட்டு, அவர்களுக்கு விருது வழங்குவதுமான 'விருதுக் கூத்து' சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்துவருகின்றன. ஒரு பொன்னாடைதான் ஒரு விருது நிகழ்வுக்கு வருவோருக்கான சன்மானமாகும்.

அமைப்பு எதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதற்கான எல்லா திட்டங்களையும் ஒரு மூலையில் ஒதுக்கி வைத்து விட்டு , முதல் வேலையாக கொழுத்த பழங்களை வைத்து விருது கொடுப்பதும், நாறியமீனைக் கண்ட பூனைகள்போல விருதை கண்டு பாய்ந்தடித்து போவோரை இழுத்து மேடையேற்றி விருதை கொடுப்பதும் தான் தற்போது புலம்பெயர்தேசங்களில் இடம்பெற்று வருகின்றன.

உண்மையில் விருது என்பது ஒரு மனிதனை மதிப்பளிக்கும், மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அடையாளப்படுத்தும் கௌரவமான ஒரு விடயம். ஆனால் யார் விருது வழங்க வேண்டும் யாரிடம் விருது வாங்க வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டும். சமூகம் சார்ந்து - சமூக மட்டத்தில் இயங்கும் ஓர் அமைப்பு ஒருவரை மேடையேற்றி விருது வழங்குகிறது எனில் அந்த விருதுக்கு தனி மரியாதை இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி அந்த மனிதரை அங்கீகரிக்கக்கூடிய நிறைவான தகுதியிருக்கவும் வேண்டும்.

அதனைவிடுத்து இப்போது யார் நிகழ்ச்சி நடத்தினாலும் அந்த நிகழ்வில் நாலுபேருக்கு விருது வழங்கிவிட்டு, அதனைப் படம் பிடித்து தங்களதும், சொந்த பந்தங்களினதும் பேஸ்புக் பக்கங்களில் விருது வாங்கியவர், வழங்கியவர் போன்றவற்றை புகைப்படங்களுடம் பதிவேற்றி, அதற்கு 100 போலிகணக்குகளில் இருந்து வாழ்த்து மழையும் அனுப்பி சுய இன்பம் காண்பதே அதிகமாக நடந்தேறிவருகின்றது.

சிட்னியில் அண்மைய காலத்தில் இத்தகைய விருது விழாக்கள் பல நடந்துள்ளன. அதில் விருது வாங்கிய ஒருவரின் உள்ளக் குமுறலை இங்கு பதிவிடுகின்றோம்.

விழா ஏற்பாட்டாளர், விழா நடத்துவதற்கு இரண்டு மூன்று மாதங்களாக சிட்னி மற்றும் மெல்பேர்ணில் குறிப்பாக பெண்களை தொடர்பு கொண்டு உங்களுக்கு விருது ஒன்று கொடுக்கவுள்ளோம். தயவு செய்து வந்து பெற்றுகொள்ளுங்கள் என்று வலிந்து இழுத்துள்ளார். இதில் பலர் வெட்டிவிட்ட கதைகளும் உள்ளன.

விருது வாங்கச் சென்றவர்களில் பலரிடம், 'நீங்க ரொம்ப நல்லவர் 'என்று சொல்லி சொல்லியே விருதுக்கு அழைத்துள்ளாராம் விழா ஏற்பாட்டாளர்.

சுமார் 300 பேர்வரை இந்த விழாவில் விருது பெற்றுள்ளனராம். சரி விருது வாங்கியாச்சுதானே பெட்டியைக் கட்டுவோம் என்று கிளம்பும் நேரம் பார்த்து விழா ஏற்பாட்டாளர் வைத்த கண்ணிவெடியில் சிக்கி சிதறுண்டார்களாம் விருது பெறுநர்கள்.

"நீங்கள் விருது வாங்கியதன் ஊடாக எங்க அமைப்பில் உங்களையும் இணைத்து விட்டோம். ஆளுக்கு 150 டொலர் வைச்சுட்டு கிளம்புங்க"- என்றாராம் அந்த ஏற்பாட்டளார்.

இந்தக் கண்ணிவெடியில் சிக்கி சின்னபின்னமானவர்கள் இனி அந்தப்பக்கம் தலைகூட வைத்துப்படுக்கக் கூடாது என்ற பேசிக்கொண்டார்களாம்.

பொழுதைப் போக்குவதற்காக ஆரம்பிக்கப்படும் அமைப்புகள் சமூக அமைப்புகள் அல்ல. அதேபோன்று விலைக்கு வழங்கப்படுவதற்கு பெயர் விருதும் அல்ல. இப்பதிவை வாசிக்கும்போது தொப்பி அளவாக இருந்தால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

# விபுலானந்தருக்கு சிட்னியில் சிலை!

முத்தமிழின் வித்தகர் சுவாமி விபுலாநந்தருக்கு இலங்கைக்கு வெளியில் முதல்முறையாக சிட்னியில் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் அறிஞர்களின் செந்தமிழ் முழங்க பெரிய வெள்ளி தினமான29.03.2024 வெள்ளிக்கிழமையன்று, சிட்னி துர்கை அம்மன் ஆலயத்தில் சுவாமி விபுலாநந்தரின் வெண்கலத்தில் அமைக்கப்பட்ட திருவுருவச் சிலை கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

பழந்தமிழரின் இசை நுட்பங்கள், யாழ் ஆகியன பற்றி ஆராய்ச்சி முறையாக விபரிக்கும் ஒரு முதல் நூல் யாழ் நூலாகும். பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளாகிய வில் யாழ், பேரி யாழ், மகர யாழ், செங்கோட்டி யாழ், சீறி யாழ், சகோட யாழ் என்பன பற்றி யாழ் நூல் கூறுகின்றது.

இந்நூலை இயற்றியவர் ஈழத்தின் கிழக்கில் அவதரித்த சுவாமி விபுலாநந்தர் . அவ்வாறு தமிழுக்கு சைவத்துக்கும் தொண்டாற்றிய சுவாமி விபுலாநந்தரின் உருவச்சிலையே சிட்னியில் திறக்கப்பட்டது.

சிட்னி வாழ்மக்களுக்கு பெருமை சேர்க்கும் வண்ணமாக, சங்கத்தமிழ் பாடிய சிங்க தமிழன், முத்தமிழ் வித்தகன்-விபுலானந்த அடிகள் திருவுருவச் சிலை அமைந்துள்ளது.

இந்த நிகழ்வின் சிறப்பு அதிதியாக அண்ணாமலைப் பல்கலை கழகம் - கனடா வளாகத்தின் தலைவர் பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம் கலந்து சிறப்பித்திருந்தார். இவர் சுவாமிகள் பிறந்த காரைதீவு மண்ணைப் பிறப்பிடமாக கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிட்னி உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் ஸ்தாபகர், அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றிய சமூச்க செயல்பாட்டாளர் திருவாளர். நாகமணி குணரெட்ணம் அவர்களுடைய முழு முயற்சியின் பேரில் சுவாமி விபுலானந்த அடிகளார் திருவுருவ சிலை திரைநீக்க நிகழ்வு நடந்தது.

பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்திருந்த பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள், கல்வியலாளர் பெருமக்களின் பங்கேற்போடும், அவர்களின் பேருரைகளோடும் அவை நிறைந்த மக்கள் கூட்டத்தோடும் வெகு சிறப்பாக சிட்னி மாநகரில் இந்தச் சிலைதிறப்பு விழா நிகழ்ந்தேறியது.

சிலைதிறப்பு விழாவின்போது "சிட்னியில் அடிகளார் படிவமலர் " எனும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.











WARNA LEGAL
Justice for all


NOTARY
Service

நம்பகத்தன்மை வாய்ந்த உறுதிப்பத்திரம் எழுதும் சேவையை பெற...

Are you in need of a reliable notary service? Look no further than our experienced team and professional notaries.

We can notarize a wide range of documents, including:

- Justice for all
- Powers of attorney
- Wills and trusts
- Real estate documents
- Affidavits and Declarations
- Consent of Travel Documents
- Official Government Documents
- Notarisation of Company and Trademark documents



+613 9792 9977

Vanity Court, 6/249-253 Lonsdale St, Dandenong
3/223-225 High St, Thomastown VIC 3074



மெல்பேர்ன் ஸ்ரீ சுப்ரமணியர் ஆலயத்தின்
ஷண்முகர், சிவன் பெருமாள்

# மஹா கும்பாபிஷேகம்

12/05/2024 ஞாயிற்றுக்கிழமை

Melbourne Sri Subramaniyar Temple
Shanmughar, Shiva, Perumal

# Maha Kumbhabhishekam

Sunday 12th of May 2024

**324 Perry Road, Keysborough VIC, GAA Gaelic Park**

**திகதி : 11.05.2024 (சனிக்கிழமை )**

**காலை 9.00 மணி :** கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் லக்ஷ்மி ஹோமம், தான்யாதி வாசம், அன்னதானம் வழங்கப்படும்.

**மாலை 4.00 மணி :** ஜலாதி வாசம்

**மாலை 6.00 மணி :** பக்தர்கள் முருக பெருமானுக்கு அபிஷேகம் செய்யலாம்.திருப்புகழ் கச்சேரி நடைபெறும். அன்னதானம் வழங்கப்படும்

**திகதி : 12.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)**

**காலை 8.00 மணி :** கிரியைகள் ஆரம்பம்

**09.00–10.00 மணி :** கும்பாபிஷேகம் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து ஷண்முகார்ச்சனையும்
ஷண்முகர் திருநடனமும் நடைபெற்று,
பக்தர்கள் அர்ச்சனைகள்,
தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.

**Saturday 11th of May 2024**

**9.00 am Morning :** Ganapati Homam, Navagraha Homam, Lakshmi Homam, Thanyathi Vasam, Lunch will be provided

**4.00pm Afternoon :** Jalathi Vasam

**6.00pm Evening :** Devotees can perform abhishekam for all Deities, Thiruppugazh Concert, Dinner will follow

**Sunday 12th of May 2024**

**8.00am:** Rituals will be performed

**09.00-10.00am :** Kumbhabhishekam will be held
Shanmughar Archanai and Shanmughar Thirunadanam will follow directly after
Devotees can perform archanai for all Deities, Lunch will then follow.

**தொடர்புகள் / Contact -: 0403 685 413**

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 81 சித்திரை 2024 தொ.பே:1800 960 162

# அகதிகள் குற்றவளிகள் அல்லர்

ஆஸ்திரேலியாவில் புகலிடம்கோரும் அகதிகளுக்கு எதிராக 'அடக்குமுறை – ஒடுக்குமுறை' அஸ்திரத்தை கையில் எடுத்துள்ளது லேபர் அரசு. இது அகதிகளின் உரிமைகளுக்கும், பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

நாடு கடத்தல் தொடர்பான குறித்த சட்டமூலத்தை அவசர அவசரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு லேபர் அரசு முற்பட்டாலும், லிபரல் கூட்டணியினரும், பசுமைவாதிகளும் செனட் சபையில் அதற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளனர். கீழ் சபையில் அனுமதி கிட்டியபோதிலும் செனட்டில் ஒப்புதல் கிடைக்கப்பெறாமை லேபர் அரசுக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளது.

காலரையற்ற தடுப்புக் காவல் தொடர்பில் மற்றுமொரு உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளியாவதற்கு முன்னதாக மேற்படி சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சி எடுக் கப்பட்டாலும் தற்போது மே மாதம்வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் இருந்து நாடுகடத்தலை எதிர் கொண்டுள்ள புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதபட்சத்தில் அவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்கவும், குடிவரவு அமைச்சருக்கு அது தொடர்பில் உரிய அதிகாரங்களை வழங்குவதுமே புதிய சட்டத்தின் நோக்கம். அதிகபட்ச தண்டனையாக ஐந்தாண்டுகால சிறைத் தண்டனையும், அபராதமும் முன்மொழியப்பட்டுள்ளது.

எனினும், இச்சட்டத்தின் உள்ளடக்கங்கள் பற்றி தொடர்பில் ஆராய்வதற்கு காலஅவகாசம் தேவையென லிபரல் கட்சியினர், பசுமைவாதிகள் மற்றும் சுயாதீன செனட்டர்கள் விடுத்தகோரிக்கையின் பிரகாரம் சட்டமூலம் மே மாதம்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காலவரையறையற்ற தடுப்புக்காவல் சட்டவிரோதம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து தடுப்பில் இருந்த 130 இற்கு மேற்பட்டோர் விடுவிக்கப்பட்டனர். உயர்நீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பின் பின்னர் லேபர் அரசு கையாண்ட விதம் குறித்து கடும் விமர்சனங்களுக்கு உள்ளானது. பார தூரமான குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள்கூட வெளியில் வந்துள்ளதால், சமூக பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன், குடிவரவு அமைச்சர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோர் பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இவ்விடயம் அரசியல் களத்தை ஆக்கிரமித்து மிகப்பெரிய லேபர் அரசு எதிர்ப்பு அலையை உருவாக்கியது. அந்த புயல் ஓய்வதற்குள், அகதிகள் படகுகள் வந்த விவகாரம் லேபர் அரசுக்கு பெரும் சூறாவளியாகவே அமைந்தது. எல்லை பாதுகாப்பிலும் ஆட்சியாளர்கள் தோல்வி கண்டுவிட்டனர் என எதிரணிகள் சரமாரியாக விமர்சனக் கணைகளைத் தொடுத்தன. இதனையடுத்து சமூகப் பாதுகாப்பின் நிமித்தம் அவசர பாதுகாப்பு ஏற்பாடுகளும், சட்டத்திருத்தங்களும் செய்யப்பட்டன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் குடியேற்றக் காவல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கும் அடுத்த தீர்ப்பும் தமக்கு நெருக்கடியாக அமையலாம் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே அவசர நடவடிக்கையில் லேபர் அரசு இறங்கியது.

எதிரணிகளின் விமர்சனங்களில் இருந்து தப்புதல், அகதிகளுக்கு எதிராக மேலும் இறுக்கமான அணுகுமுறையை கடைப்பிடித்தல் போன்ற விடயங்களை மட்டும் கருத்திற்கொண்டு புதிய சட்டமூலத்தை முன்வைத்த குடிவரவு அமைச்சர், இதற்கு செனட்டில் ஆதரவு கிடைக்குமா என ஆராயாமல் இருந்தமை அவரது அவசர புத்தியை வெளிப்படுத்துகின்றது.

ஜனநாயக நாடு என நம்பப்படும் ஆஸ்திரேலியா தம்மை கைவிடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அகதிகள் வந்தனர், எப்படியாவது நிரந்தரக் குடியுரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கையை இன்றளவும் வைத்துள்ளனர். இந்நிலையில் அகதிகளை – புகலிடக்கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள இந்த சட்ட மூலம் ஏற்புடையது அல்ல. எனவே, சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கூறுவதுபோல சட்டமூலம் வாபஸ் பெறப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

நாடு கடத்தப்படுபவர்களை ஏற்காத நாட்டில் உள்ள பிரஜைகள் விசாவுக்கு விண்ணப்பிக்க முடியாது என்ற ஏற்பாடு, சட்டவிரோத ஆட்கடத்தலுக்கு வலுசேர்க்ககூடும். அதன்மூலம் எல்லைப் பாதுகாப்பு மேலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகலாம். மேற்படி சட்டம் உண்மையான அகதிகளை இலக்கு வைக்கும் கருவி அல்ல ஆளுங்கட்சி நியாயப்படுத்தினாலும் இதன் பின்னணியில் அகதிகளுக்கு ஏதேனுமொரு வழியில் பொறி வைக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

# மாணவர்களைத் தவறாக வழிநடத்தும் விவாத அரங்குகள்



● ஜெரா

ஈழத்தமிழ்ச் சமூகத்திடம் மேடைப் பேச்சுகளில் தனி விருப்புண்டு. பாட்டியிடம் கதை கேட்கும் மரபும், புராணக் கதை படிப்பும் இவ்வாறான மேடைப்பேச்சு களிடத்தில் விருப்புக்கொள்ள வழிசமைத்துக்கொடுத்தி ருக்கலாம். ஆழமாகவும், அறிவார்ந்த தளத்திலும் பேசப்படும் விடயங்களைக் கூர்ந்து கவனிக்கும் சமூகமாக ஈழத்தமிழர் வளர்ந்த விதமும் இந்த மேடைப் பேச்சுகளிலிருந்துதான். அறவழிப் போராட்டம், ஆயுதப் போராட்டம் எனத் தமிழர்கள் முன்னெடுத்த தம் விடுதலைக்கான அனைத்து விதப் போராட்டங்களையும்கூட வடிவமைத்ததும், வளர்த்ததும் கூட இந்தப் மேடைப் பேச்சுக்கள்தான். வருடத்திற்கு ஒரு முறை நம் தேசத்திலிருந்து ஒலிக்கும் அந்த பதினைந்து நிமிட உரைக்காக உலகமே காத்திருந்த வரலாற்றையும், அதற்கு மறுநாள் அந்த உரையின் மீதான கொள்கை விளக்கத்திற்காக காத்திருந்த வரலாற்றையும் உருவாக்கியதே இத்தகைய மேடைப்பேச்சுகள்தான். இவ்வளவு பண்பாட்டுப்பின்னணி கொண்ட மேடைப் பேச்சுகளின் முக்கியத்துவம் அண்மைக்காலமாக சிதறுண்டு



போவதை அவதானிக்க முடிகின்றது.

உதாரணத்திற்குத் தமிழ் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் இடம்பெறும் விவாதங்கள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் தமிழர் அரசியல் விடயத்திலிருந்து தடமாறிச் செல்வதனைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அண்மையில் இரண்டு பிரபல பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற விவாதம் ஒன்றின்போது, புலம்பெயர் தமிழர் களின் தாயக அரசியல் மீதான தலையீடு மாணவர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அந்தக் காணொலியை சமூகவலைதளங்கள் முழுவதும் நம்மவர்கள் பரப்பிக் கொண்டுமிருக்கின்றனர்.

இலங்கை அரசுக்கு இப்போதிருக்கும் ஒரேயொரு தலையிடி என்றால் அது புலம்பெயர் தமிழர்கள்தான். தாயகத்தின் தமிழ் அரசியல்வாதிகளையும், புலமையாளர் களையும் தனது கட்டுக்குள் வைத்திருக்கும் இலங்கை அரசுக்கு, புலம்பெயர் தமிழர்கள் முன்னெடுக்கும் விதம்விதமான அரசியல் முன்னெடுப்புகள் ஏதோ ஒரு விதத்தில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இலங்கை மீது அவப்பெயரை ஏற்படுத்துகின்றன. எனவேதான் அரசு நேரடியாகவும், மறைமுகமாகவும் புலம்பெயர் தமிழர்களின் அரசியல் உணர்வை சிதைக்கும், மழுங்கடிக்கும் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது.

'டயஸ்போறா' என அரசியல் அர்த்தப்படும் நாடற்றவர் களின் சமூகத் தொகுதி உலகம் முழுவதும் பலமானது. இன்றைக்கு இஸ்ரேல் உலகையே ஆட்டிப்படைக்கும் சக்தியாக வளர்ந்திருக்கின்றமைக்குப் பிரதான காரணமே புலம்பெயர் யூதர்கள்தான். ஹிட்லர் மேற்கொண்ட யூத இனத்தின் மீதான படுகொலையால் அவர்கள் உலகம் முழுவதும் சிதறினார்கள். சிறுகச் சிறுகத் தம் இன உணர்வை சந்ததி கடத்தினார்கள். பொருளாதார ரீதியாகவும், பண் பாட்டு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தம்மை மேம் படுத்திக்கொள்ள 'யூத டயஸ்போறா' ஆழமாகப் பணி யாற்றியது. புல தந்திரங்களும், சதிகளும் நிறைந்த 'யூத டயஸ்போறாவின்' அயராத உழைப்பினாலேயே இன்றைய இஸ்ரேல் உருவானது. அதாவது பெரும் இனப்படு கொலைக்குள்ளான யூதர்களுக்குத் தனிநாடு உதய மானது.

ஈழத்தமிழர்களின் நிலையும் அதுவேதான். யூதர்களைப் போலவே பெரும் இனப்படுகொலைக்குள்ளாகிக்கொண்டி ருக்கின்றனர். அரசியல், பொருளாதாரம், கல்வி, பண்பாடு என அனைத்து விடயங்களிலும் வேட்டையாடப்பட்டு க்கொண்டிருக்கின்றனர். இந்தப் பாதிப்புகளிலிருந்து உயிர்தப்புவதற்காகவும், பொருளாதார ரீதியான வலுவை உருவாக்கவும் புலம்பெயர்ந்த தமிழர்கள் 'தமிழ் டயஸ்போறாவாக' உருவெடுத்திருக்கின்றனர். குறுகியதொரு காலத்தில் உலகமே எதிர்பாராதளவிற்கு வளர்ந்திருக்கின்றனர். அவர்கள் வதியும் அந்தந்த நாடுகளின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் சிலநாடுகளில் பலம்பெற் றிருக்கின்றனர். அத்தோடு, போரினால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் வாழ்வாதார - கல்வி மேம்பாட்டிற்காகப் பல வழிகளிலும் உதவியிருக் கின்றனர். உழைத்துக்கொண்டிருக்கின்றனர். போருக்குப் பின்னரான துரித மீட்பு விடயத்தில் ஓர் அரசு செய்யவேண்டிய பணியின் மொத்தச்சுமையையும் சுமந்தவர்கள் புலம்பெயர் தமிழர்கள் .எனவேதான் 'தமிழ் டயஸ்போறா' மீது கண்வைத்திருக்கிறது இலங்கை அரசு.

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி

editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# மாணவர்களை தவறாக வழிநடத்தும் விவாத அரங்குகள்




(06ஆம் பக்கத் தொடர்ச்சி)


இந்தக் கண்வைப்பானது பல்வேறு தளங்களிலும் வேலைசெய்கின்றது. புலம் பெயர் தமிழ் அமைப்புகளை சிதைப்பதில் தொடங்கி, தாயக விடுதலை என்கிற பொதுக் கருத்தியலிலிருந்து நீர்த்துப்போகச் செய்தல்வரைக்குமான வேலைத்திட்டங்கள் மறைமுகமாகவும் நேரடியாகவும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த வடிவங்களில் ஒன்றாகத்தான் கருத்தியல் தளத்தில் புலம்பெயர் தமிழர்களுக்கும், தாயகத்திலிருக்கும் தமிழர்களுக்கும் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக சமூக வலைதளங்களில் விரைவாகப் பரப்பப்படும் காணொலிகள், அனைத்து மட்டங்களுக்கும் சென்று சேர்கின்றன. அது சரியாக இருக்குமோ என்கிற வகையான சிந்தனைகளுக்குத் தொடக்கமிடுகின்றன. அதுவும் நாளைய தலைவர்களாக மாறப்போகின்ற பாடசாலை மாணவர்களிடத்தில் விதைக்கப்படும் இத்தகைய விதைகள் தமிழர் மத்தியில் எதிர்விளைவையே ஏற்படுத்தும்.

உண்மையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில், தமிழர்களின் இனவிடுதலையின் வரலாறு, இனவிடுதலைக்காக தியாகித்தவர்களின் வரலாறு, இங்கு இடம்பெறும் இனப்படுகொலையின் போக்கு, இலங்கையின் பௌத்த பெரும்பான்மைவாத அரசின் நிஜமுகம் குறித்தெல்லாம் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டிய தேவையிருக்கின்றது. சிங்களவர்கள் இந்நாட்டின் பெரும்பான்மையினத்தவர்கள் அவர்கள் அடிப்பார்கள். நாம் சிறுபான்மையினத்தவர்கள். அவர்களின் கீழ் அடங்கியிருந்து, அவர்கள் தருவதை வாங்கிக்கொண்டு வாழ வேண்டும் என்கிற சிந்தனை மாணவர்கள் மத்தியில் வெகுவாக வளர்ந்து வருகின்றது. இந்த விடயங்கள் குறித்தெல்லாம் மாணவர்கள் மத்தியில் புரிதல்களை ஏற்படுத்தவும், உலகப் போக்கிற்கு அமைய உயரிய மனித மாண்புகளையும், பல்லின ஜனநாயகச் சூழலுக்குப் பொருத்தமான இனமாக நம்மைக் கட்டமைப்பது தொடர்பிலும், மனிதவுரிமைகளுக்கு அளிக்கவேண்டிய முக்கியத்துவதும் குறித்தும், புதிய கண்டுபிடிப்புகள் பற்றியும் மாணவர்கள் மத்தியில் பேசவேண்டும். ஆனால் இங்கு அது நடைபெறுவதில்லை. தமிழ் மாணவர்கள் மத்தியில் இதுபோன்று உள்முரண்களை வளர்க்கும் வாதங்களும், பிரதிவாதங்களுமே வளர்க்கப்படுகின்றன. அத்தகைய முரண்களை வளர்க்கும் விதமாக அமையும் மாணவர்களின் மேடைப்பேச்சுகளுக்கு வரவேற்பும் கிடைக்கின்றன. மறுபுறத்தே, தமிழ் இனத்தின் தேசிய அடையாளமான காந்தள் மலரை பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டியின் இல்ல அலங்கரிப்பிற்காக வடிவமைத்தமைக்காக மாணவர்கள் மீது புலனாய்வாளர்களினதும், பொலிஸாரினதும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. இந்தச் சிறுவயதிலேயே மாணவர்களிடையே அரச அடக்குமுறையையும், படைப்பாற்றல் மீதான தடையையும் விதிக்கும் இந்த அரசு குறித்தெல்லாம் விவாதப் போட்டிகளை வடிவமைக்கும் தரப்பினர் ஆர்வங் கொள்வதில்லை.

ஆகவே தமிழர்கள் மத்தியில் பலமான பரப்புரை ஆயுதமாக இருக்கும் மேடைப்பேச்சுகளும், விவாதங்களும் கவனமாகக் கையாளப்படல்வேண்டும். நாளைய தலைவர்களாகிய இன்றைய மாணவர்களிடத்தில் விதைக்கும் விதைகள் நன்மரங்களை துளிர்செய்வனவாக அமைதல் வேண்டும். இந்த விதைகளை விதைப்போர் யாராக இருப்பினும், தமிழர் இன நலனில் அக்கறைகொள்வோராக இருக்கவேண்டும்.





# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

## REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# ஓங்குகிறதா லிபரல்களின் கை?

சியாமளா யோகேஸ்வரன்

கடந்த வாரம் குயின்ஸ்லாந்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களிலும், டாஸ்மேனியாவில் நடைபெற்றிருந்த மாநில நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேர்வுக்கான தேர்தல் முடிவுகளிலும் தேசிய எதிர்க்கட்சியாக உள்ள லிபரலின் கை ஓங்கியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. தற்போதைய குயின்ஸ்லாந்து மாநில ஆளுங்கட்சியாக இருக்கும் லேபர் கட்சிக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மிகத் தெளிவான செய்தியொன்றை மக்கள் சொல்லியிருக்கின்றார்கள். வாக்காளர்களின் செய்தியைச் சரியாகப் புரிந்து கொண்டு உடனடி நடவடிக்கைகளை எடுக்கவில்லையாயின் ஐப்பசியில் நடக்க இருக்கும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் லேபரானது பலத்த பின்னடைவைச் சந்திக்கும் என்பதையும் இந்த முடிவுகள் கோடி காட்டியிருக்கின்றன.

மூன்று தவணைகளாக குயின்ஸ்லாந்து முதல்வராக இருந்த அனஸ்தேசியா , இந்தத் தோல்விப்பாதையை முன்கூட்டிய கணிப்பீட்டுத் தரவுகளின்படி எதிர்பார்த்திருந்தார் என்றே கூறப்படுகின்றது. அவர் திடீரென கடந்த ஆண்டு மார்கழியில் தன் பதவியை ராஜினாமா செய்ததும், பதில் தலைவராயிருந்த ஸ்ரீவன் மைல்ஸ் முதல்வராக ஆக்கப்பட்டிருந்ததும் லேபர் கட்சியின் கட்டமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தமையும் எதிர்பாராத நிகழ்வுகளே.

மக்களின் பாதுகாப்புச் சம்பந்தமான பிரச்சினைகள், இளங்குற்றவாளிகளால் சமூகத்தில் அதிகரித்து வரும் வன்முறைகள், மக்களின் வீடு, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளே இந்தத் தேர்தலில் லேபர் கட்சியானது பின்னடைவைச் சந்திப்பதற்கான பிரதான காரணிகளாக அமைந்திருந்தன. ஆழ வேரோடி இருக்கும் இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை எட்டுவதற்கு இடையில் இருந்த மூன்று மாதங்கள் ஸ்ரீவன் மைல்ஸுக்குப் போதுமானவையாக இருந்திருக்க மாட்டாது. 26 உள்ளூராட்சித் தொகுதிகளின் நகரபிதாவுக்காக நடத்தப்பட்ட தேர்தலில் லிபரல் 17 இடங்களையும், லேபர் 5 இடங்களையும் கிறீன் கட்சியானது இரண்டு இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளன. தேர்தல் முடிவுகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஸ்ரீவன், மூடி மெழுகாமல் தேர்தல் முடிவுகள் மூலம் மக்கள் சொன்ன செய்தியை ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்தார்.

குயின்ஸ்லாந்தின் இரண்டு பிரதேசசபைகளின் உறுப்பினர்களுக்காக பதில் தேர்வும் இந்த உள்ளூராட்சித் தேர்தலுடன் நடைபெற்றிருந்தது. இப்ஸ்விச் என்ற இடத்தில் லேபர் கட்சியானது லிபரலிடம் தான் நீண்டகாலமாகத் தக்க வைத்திருந்த இடத்தைப் பறி கொடுத்து விட்டிருந்தது. குயின்ஸ்லாந்து மக்கள் பாரம்பரியமாக ஒரு கட்சியைப் பிடித்துக் கொண்டு, சிந்திக்காமல் தொடர்ந்தும் அதற்கே வாக்களிப்பவர்கள் அல்லர். கட்சிகளினது கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் வைத்துக் கொண்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் கட்சிக்கே வாக்களிப்பவர்களாக இருக்கின்றார்கள். அத்துடன் புலம்பெயர்ந்தவர்களின் அடுத்த சந்ததியினரும், புதிதாக குடியுரிமை வாங்கியவர்களுமே தற்போதைய வாக்காளர்களில் பெரும் சதவீதத்தை வகிக்கின்றார்கள்

2015ல் நடத்தப்பட்ட தேர்தலில் லிபரல் கட்சி 4 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. லேபர் கட்சியானது ஆட்சியில் இருந்த தொகுதிகளை இம்முறை பறி கொடுத்திருப்பதையும், கிறீன் கட்சி பலமுள்ள இரண்டாம் தரக்கட்சியாக வளர்ச்சி கண்டிருப்பதையும் இந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றன.

கிறீன் கட்சியின் வாக்குகளின் சதவீதமானது இரட்டை இலக்கத்தினால் அதிகரித்திருப்பதும் இளம் வாக்காளர்கள் பெரும்பாலும் கிறீன் கட்சியை ஆதரிப்பதும் குறிப்பிடத்தக்கது. இன்னமும் இரண்டு இடங்களில் ஜொனதன் சிறீரங்கநாதன் தலைமையிலான கிறீன் கட்சி வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சியினருக்கு இருக்கும் பிரசார ஊடகங்களின் செல்வாக்கு கிறீனுக்கு இருக்கவில்லை என்பதால் அவர்களுடைய சரியான நிலைப்பாடு வாக்காளர்களைச் சென்றடையவில்லை என்று கூறப்படுகின்றது. அத்துடன் குயின்ஸ்லாந்து மக்கள் எதிர்நோக்கியிருக்கும் வீட்டுப் பிரச்சினையில் அதிகரித்த வீட்டு வரியுடன் வீட்டு வாடகைகளின் உயர்வு உடனடியாக அமுல்படுத்தப்படும் வகையில் நிறுத்தப்படும் என்ற கிறீனின் அறிவித்தலானது வீட்டு உரிமையாளர்களினால் பெரிதாக வரவேற்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

தேசிய மட்டத்தில் கிறீன் கட்சியானது பாலியல் வேறுபாடுகள் தொடர்பாக பாடசாலைகள் காண்பித்து வரும் பிரிவினைகள் நீக்கப்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரயோகித்து வரும் அழுத்தமானது சமய அமைப்புகளால் பெரிதும் வரவேற்கப்படாத நிலையும் மாநில மட்ட தேர்தல்களில் பதில் விளைவை ஏற்படுத்தியிருக்கக் கூடும்.

குயின்ஸ்லாந்தில் 2032 ஆம் ஆண்டு நடத்தப்பட இருக்கும் ஒலிம்பிக்ஸ் தொடர்பான செலவீனங்களும், அது மக்களின் நாளாந்த வாழ்க்கையில் ஏற்படுத்த இருக்கும் மாறுதல்களும் கூட தேர்தலின் வெற்றியைத் தீர்மானித்த ஒரு காரணியாகச் சொல்லப்படுகின்றது. ஏற்கனவே இருக்கும் விளையாட்டுத் திடலை உடைத்து மீளக்கட்டுவது என்பது மாநில வரவு-செலவுப்பட்டியலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை மறுப்பதற்கில்லை.

லிபரல் கட்சியானது உண்மையான சுகாதாரத் தரவுகளை மக்களுக்கு அறிவிப்போம், சமூக முதலீட்டுத் தொகைகளை வழங்குவோம், வீட்டுக்கான கடன் தொகையில் மாற்றங்களைக் கொண்டு வருவோம் என்று மக்கள் எதிர்பார்ப்புக்கேற்ப தமது கொள்கைகளைப் பிரகடனப்படுத்தியிருந்தனர். அத்துடன் இப்ஸ்விச் கடைத்தொகுதியில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு பாட்டி அவரது பேத்தியின் முன்னிலையில் வைத்து பதின்மவயதினர் ஒருவரால் கொலை செய்யப்பட்டிருந்தமை அந்தப் பகுதியில் ஒரு அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியிருந்தது. இளங்குற்றவாளிகளை அடக்குவதில் ஆளுங்கட்சியின் இயலாமையைச் சாடி லிபரல் மேற்கொண்ட பிரசாரம் பெரும்பலனைக் கொடுத்திருக்கின்றது என்று தான் கூறவேண்டும்.

லிபரல் கட்சியைச் சேர்ந்த ஸ்கிரினர் பிறிஸ்பேன் நகராட்சியின் நகரபிதாவாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அடுத்து வரும் நான்கு வருடங்களிலும் தன்னைத் தெரிவு செய்த வாக்காளர்களுக்காகத் தான் உண்மையாக உழைப்பேன் என அவர் உறுதி கூறியுள்ளார். அத்துடன் வரிகளை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வதாகவும், பஸ் பாதை போன்ற உள்ளகக் கட்டமைப்புகளில் அதிக கவனம் செலுத்த இருப்பதாகவும், வீதி சமிக்ஞை விளக்குகளுக்காக 15 மில்லியன் டொலரை ஒதுக்க இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றமை மேலும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் என்பதுடன் பொறியியலுக்கு இன்னமும் வலுச்சேர்ப்பதாகவும் உள்ளது. இவை நடக்க இருக்கும் மாநிலப் பொதுத்தேர்தலின் முடிவுகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

லிபரல் கட்சி ஆட்சிக்கு வருமாயின் சமூகத்துக்கு அத்தியாவசியமான, முன்னணியில் வேலை செய்பவர்களின் வேலைகள் கேள்விக்குறியாக்கப்படும் என்பதும், அரச நிறுவனங்களும் சொத்துகளும் தனியார் வசமாகும் என்பதும் கடந்த காலங்களின் வரலாறு என லேபர் குறை கூறுகின்றது. அத்துடன் தனது தவறுகளைத் திருத்திக் கொள்ளும் முகமாக ஒலிம்பிக்குக்காக புதியதொரு விளையாட்டரங்கை உருவாக்க வேண்டிய தேவையில்லை என்ற முடிவில் லேபர் கட்சி உறுதியாக இருக்கின்றது. அத்துடன் அதிகரித்து வரும் இளவயதினரின் குற்றச் செயல்களை முடிவுக்குக் கொண்டு வரும் விதமாக உருவாக்கப்பட்ட விசேட காவற்துறைப் படை ஒன்று முனைப்பாக நடவடிக்கைகளில் இறங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

டஸ்மேனியாவின் மாநிலத் தேர்தலானது மார்ச் 23 அன்று நடைபெற்றுள்ளது. வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் முன்னரே லிபரல் கட்சியானது தாமே வெற்றி பெற்று விட்டதாக அறிவித்திருப்பது கேலிக்குரியதாகப் பார்க்கப்படுகின்றது. லிபரலும் லேபரும் பெரும்பான்மையைத் தனித்துப் பெற முடியாதிருப்பதும் கிறீன் கட்சியின் உதவியோடு ஆட்சியைக் கைப்பற்றுவதும் தான் கடந்த தேர்தல்களில் நடந்திருக்கின்றது. எந்தச் சிறுபான்மைக் கட்சியுடனும் கூட்டு வைப்பதன் மூலம் முன்னர் விட்ட தவறை மீண்டும் விடப் போவதில்லை என்ற லேபர் கட்சியின் அறிவிப்பானது லிபரலுக்குச் சாதகமானதாகவே இருந்தாலும் தொங்கு நாடாளுமன்றத்தின் மூலம் தாம் நினைப்பவற்றை எல்லாம் சாதிக்க முடியாத நிலையே லிபரல் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

இதுவரை வெளியிடப்பட்ட முடிவுகளின் படி, மாநிலங்களில் லிபரலின் கை ஒங்கி வருகின்றது என்றே எண்ணத் தோன்றுகின்றது. யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்களின் தேவைகளும், பாதுகாப்பும் முதன்மை பெற வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. கட்சிகளும் அதைக் கருத்தில் கொண்டு தமது நகர்வுகளை மேற்கொண்டால் மட்டுமே மக்களின் வாக்கு வங்கியைச் சுவீகரித்துக் கொள்ள முடியும்.





# டி.எம்.கிருஷ்ணா : சனாதனத்தை தோலுரித்த கலைஞர்

சென்னையில் உள்ள மியூசிக் அக்கடமி 1929ஆம் ஆண்டு முதல் கர்நாடக சங்கீதக் கலைஞர்களை கௌரவிக்கும் விதமாக 'சங்கீத கலாநிதி' விருதுகளை வழங்கி வருகிறது. 2024 ஆம் ஆண்டு இந்த விருதை டி.எம்.கிருஷ்ணாவுக்கு வழங்கவிருப்பதாகவும் 'நெடுங்காலமாக மிகத் திறமையான இசைக் கலைஞராக விளங்கும் டி.எம்.கிருஷ்ணா இந்த விருதுக்குத் தகுதியானவர்' என்றும் மியூசிக் அக்கடமி அறிவித்தது.

பொதுவாகவே விருதுகள் அறிவித்தால் சர்ச்சைகள் என்பது தவிர்க்க முடியாதது போல் மாறியிருக்கும் இந்தக் காலத்தில், டி.எம். கிருஷ்ணாவுக்கு விருது என்ற விவகாரத்தால் உண்டான சர்ச்சை அதன் உச்சத்தையே தொட்டது. டி.எம்.கிருஷ்ணாவுக்கு இந்த விருதை வழங்கக் கூடாது என்கிற குரல் தமிழகப் பிராமணர்கள் மத்தியில் கடுமையாக எழுந்தது. டி.எம்.கிருஷ்ணாவின் மீது முழுப் பிராமண சமூகமும் இத்தனை வன்மத்துடன் ஒற்றைக் குரலில் கோபம் கொள்ளக் காரணம் என்ன என்று பார்க்கலாம்.

டி.எம்.கிருஷ்ணா அதே பிராமண சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கும் பட்சத்திலும், நாற்பது ஆண்டுகளாக தொடர்ந்து கச்சேரிகள் பாடி வருகிறவர் என்கிற போதிலும் பல நேரங்களில் அவர் அந்த சமூகம் வரைந்து வைத்திருக்கும் எல்லைக் கோடுகளைத் தாண்டியவராக, அவர்களின் போலித்தனங்களை தோலுரிப்பவராக, தன் மனசுக்கு சரி என்பதை தெளிவுடன் செய்பவராகவும் இருக்கிறார்.

எண்ணூர் துறைமுகத்தில் எண்ணெய்க் கழிவுகள் கசிவு ஏற்பட்டதுமே உடனடியாக 'பொறம்போக்குப் பாடலை' பாடுகிறார், துப்புரவுத் தொழிலாளர்கள் குறித்து "மலம் அள்ளலாமா - கைகள் மலம் அள்ளலாமா' என்னும் பாடலை பாடுகிறார்,

தமிழ்நாட்டில் தொடர்ந்து பெரியார் சிலையை அவமதிக்கும் சம்பவங்கள் நடந்த போது 'சிலைகள் எல்லாம் கலையின் வடிவம்' என்னும் பாடலை பாடுகிறார்.

இதை எல்லாம் கூட மன்னித்து விடுவார்கள் ,இதற்கு எல்லாம் மேல் பெரியாரைப் பற்றி 'சிந்திக்கச் சொன்னவர் பெரியார்' என்னும் பாடலை மேடை தோறும் பாடுகிறார். அதை விடவும் கிறிஸ்தவ, இஸ்லாம் மதத்தின் பாடல்களையும் மேடைகளில் தொடர்ந்து பாடிவருகிறார் டி.எம்.கிருஷ்ணா.

கர்நாடகக் கச்சேரிகளில் மிக முக்கியமான இசைக்கருவியாக விளங்கும் மிருதங்கம் பற்றியும் அதன் உருவாக்கம் பற்றியும் அவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இறந்த பசுவின் தோலில் தான் இந்த இசைக் கருவி செய்யப்படுகிறது என்கிற ஒரு சனாதனமான பொய்யை அவரது நூல் தோலுரித்துக் காட்டியது. இருமுறை கன்றுகள் ஈன்ற ஒரு ஆரோக்கியமான பசு கொல்லப்பட்டவுடன் அதன் தோல் உரிக்கப்பட்டு, அதன் பிறகு மிருதங்கத்துக்காக வாகாக தோல் வெட்டப்பட்டு பதப்படுத்தப்பட வேண்டும் என்று அவரது நூல் மிருதங்கம் என்கிற இசைக் கருவியை பற்றி மட்டும் அல்ல அந்த இசைக் கருவியைச் செய்கிறவர்களும் பெரும் கலைஞர்களே என்று பறைச்சாற்றுகிறது.

இப்பொழுது உங்களுக்கு ஏன் டி.எம். கிருஷ்ணாவுக்கு அந்த விருது கொடுக்கப்பட்டமை சர்ச்சையாக மாறியது என்று விளங்கியிருக்கும். கர்நாடக இசையை பிராமணர்கள் தங்களின் தனிச் சொத்தாக வைத்துக் கொண்டு தமிழகத்திலும் உலகம் முழுவதும் இருக்கும் கச்சேரி சார் வணிகத்தில் பெரும் செல்வாக்கைச் செலுத்தி வருகிறார்கள். கர்நாடக இசைக்கச்சேரிகளை இன்று வெறும் பக்திப் பாடல்களுக்கான களமாகவும் சமஸ்கிருத மொழியில் மட்டுமே பாட வேண்டும் .இல்லையெனில் பாடலும், இசைக் கருவிகளும், மேடையும் தீட்டாகிவிடும் என்கிற இவர்களின் போலியான வெத்து அரசியல் இன்னும் தோலுரிக்கப்படவேண்டும். அவ்வகையில் டி.எம்.கிருஷ்ணா கொண்டாடப்பட வேண்டியவர் என்பதில் ஐயமில்லை.

# தேர்தல் பத்திரமெனும் நவீன தேர்தல் மோசடி

இந்தியாவில் அரசியல் கட்சிகள் தனிநபர்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் இருந்து நன்கொடை பெறுவதற்காக கடந்த 2017-18 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் தேர்தல் பத்திரம் என்கிற ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது. அதன் படி தேர்தல் பத்திரங்களை ரூ.1000, ரூ.10,000, ஒரு லட்சம், ரூ.10 லட்சம் மற்றும் ஒரு கோடி ரூபாய் மதிப்புகளில் இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான எஸ்.பி.ஐ. வங்கி, நாடு முழுவதும் 29 கிளைகளில் மட்டுமே வெளியிடும். 1951 இந்திய மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 29A பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட கட்சிகள், மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் 1% அதிகமான வாக்குகளைப் பெற்ற கட்சிகள் மட்டுமே இந்தத் தேர்தல் பத்திரங்களை நன்கொடையாகப் பெற முடியும் என்கிற விதிமுறை அதில் இணைக்கப்பட்டது.


அ.முத்துக்கிருஷ்ணன்

இந்த தேர்தல் பத்திரங்களை வாங்குபவர்களின் பெயர், முகவரி, நிதி யாரிடம் இருந்து பெறப்பட்டது என்ற விவரங்கள் எதுவும் மற்றவர்களுக்குத் தெரியாது. இதனால், தனிநபரோ, கார்ப்பரேட் அல்லது மற்ற நிறுவனங்களோ இந்த பத்திரங்களை வாங்கி, தங்களுக்கு விருப்பமான கட்சிகளுக்கு தேர்தல் நிதியைக் கொடுக்கலாம். இப்படி உலகத்தில் எங்குமே நடைமுறையில் இல்லாத ஒரு திட்டத்தை இந்திய அரசு அறிவித்தது முதலே பலர் இதனை விமர்சித்து வந்தனர்.

இது ஜனநாயகத்துக்கு எதிரானது, வெளிப்படைத் தன்மை அற்றது என்கிற குரல்களின் மத்தியில் பல்வேறு அமைப்புகள் இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தன. தேர்தல் பத்திரத் திட்டம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என்று அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தும் இந்த விவகாரம் பெரும் பேசு பொருளானது.

பெயர் குறிப்பிடாத தேர்தல் பத்திரங்கள் கைமாறு ஆதாயங்களுக்கு வழி வகுக்கும், கட்சிகளுக்கு யார் நன்கொடை தருகிறார்கள் என்பதை மக்கள் அறிவது அவசியம் என்று தீர்ப்புக் கூறியது நீதிமன்றம். தேர்தல் பத்திரத் திட்டத்துக்காக மோடி அரசு மேற்கொண்ட சட்டத் திருத்தங்கள் அரசியலமைப்புக்குப் புறம்பானவை என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு தோலுரித்துக் காட்டியது. அது மட்டும் அல்ல , அரசியல் கட்சிகள் பெற்ற நன்கொடைகளின் பட்டியலை உடனடியாக எஸ்.பி.ஐ வங்கி தேர்தல் ஆணையத்துக்கு வழங்க வேண்டும், அதனை உடனடியாக அவர்கள் இணையத்தளத்தில் பதிவேற்றவேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டார்கள்.

நீதிமன்றம் உத்தரவிட்டதால் தான் இந்த விபரங்களே வெளியானது ,ஆனாலும் எஸ்.பி.ஐ வங்கி அப்பொழுதும் கூட முழுமையாக விபரங்களை வெளியிடவில்லை. நமக்கு கிடைத்த விபரங்களை ஆராயும் போது பல திடுக்கிடும் தகவல்கள் புலப்படுகின்றன. இந்தியாவில் தொழில் செய்யும் தனியார் நிறுவனங்கள் மீது ஒன்றிய அரசின் அமுலாக்கத்துறை, வருமான வரித்துறை உள்ளிட்ட பல துறையினர் சோதனை (ரெய்ட்) நடத்துகிறார்கள், அப்படி சோதனை நடத்திய சில நாட்களில் அந்நிறுவனங்கள் பல நூறு கோடி மதிப்பிலான தேர்தல் பத்திரங்களை வாங்கி பா.ஜ.க. கட்சிக்கு வழங்குகின்றன. அதே போல் தேர்தல் பத்திரங்களை வாங்கி பா.ஜ.க.வுக்கு கொடுத்த சில நாட்களிலேயே அந்த நிறுவனத்துக்கு அரசாங்கத்தின் பெரும் ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பத்திரம் என்ற பெயரில் நன்கொடை வசூலிக்கும் பாரதிய ஜனதாக் கட்சியின் மோடி அரசு, உலகிலேயே மிகப்பெரிய ஊழலை செய்துள்ளமை புலப்பட்டது. தேர்தல் பத்திரங்கள் மூலம் பா.ஜ.க.வுக்கு ரூ.6060 கோடியும், காங்கிரஸ் கட்சிக்கு ரூ.1600 கோடியும் கிடைத்துள்ளது, மற்ற மாநில கட்சிகளுக்கு சிறிய தொகைகளே கிடைத்துள்ளன. ஆனால் பா.ஜ.க.வை தவிர வேறு எந்தக் கட்சியும் அரசுத் துறைகளை வைத்து மிரட்டி இப்படி வசூல் வேட்டையில் ஈடுபடவில்லை என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம், அதே போல் மற்றக் கட்சிகள் தாங்கள் பெற்ற தொகை குறித்த விபரங்களை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்து விட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்கிற ஒற்றைக் கட்சி மட்டுமே இந்தத் தேர்தல் பத்திரங்களை தங்கள் கட்சி பெறாது என்று அறிவித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்தது. அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தத் தேர்தல் பத்திர விவகாரம் பெரும் பேசுபொருளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தியாவின் நிதி அமைச்சரான நிர்மலா சீத்தாராமனின் கணவரும் பொருளாதார அறிஞருமான பர்கலா பிரபாகர் அவர்கள், இந்த தேர்தல் பத்திர விவகாரத்தை உலகின் மிகப்பெரும் ஊழல் என்றே குறிப்பிடுகிறார்.



# வெடுக்குநாறிமலையில் நடந்தது என்ன?



● ஆர்.சுகந்தன்

ஆலயப் பூசைவழிபாடுகளைத் தொடர்ந்து நடத்த எவ்வித தடையும் இல்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்ததன் அடிப்படையில் இவ்வருடம் சிவராத்திரி விழாவினை ஆலயத்தில் நடத்த ஆலய நிர்வாகம் தீர்மானித்தது. சட்டத்தரணிகளின் ஆலோசனையின்படி, கடந்த 04 ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிமன்றில், ஏற்கனவே தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கினை மீளெடுத்து, சிவராத்திரி நிகழ்வுகளுக்கு மின்சாரத்தைப் பெறுவதற்கு இயந்திரங்களைப் பயன்படுத்த ஆலய நிர்வாகத்தினால் நீதிமன்றத்திடம் அனுமதி கோரப்பட்டது. வழிபாட்டு நிகழ்வுகளுக்கு ஏற்கனவே நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றமையால், சிவராத்திரி நிகழ்வுகளை நடத்தலாம் என நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்தத்தீர்ப்பு வெளியாகி மறுநாள் (05.03.2024) பௌத்த பிக்குகளின் அழுத்தம் காரணமாக, நெடுங்கேணி பொலிஸார் மீண்டும் நீதிமன்றத்தை நாடினர். சிவராத்திரி வழிபாடுகளினால் இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டு, சமாதானக் குலைவு ஏற்படும் எனவும் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர். இதனை நிராகரித்த நீதிமன்றம், அவ்வாறு இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படுத்துபவர்களையும், ஏற்படுவதற்கான காரணகர்த்தாக்களையும் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பணித்தது.

இதனையடுத்து ஆலய நிர்வாகத்தினர் சிவராத்திரி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டனர். 07.03.2024 அன்று இரவு ஆலயச் சூழலில் சில தயார்படுத்தல் வேலைகள் இருந்தமையினால், ஆலயப் பூசகரும், அவரின் உதவியாளரும், தமது உழவு இயந்திரத்தில் பொருட்களை ஏற்றிக்கொண்டு ஆலயத்திற்குச் சென்றனர். ஆலயத்திற்கு காட்டுவழியாக நுழையும் பாதையில் வைத்து அவர்களை வழிமறித்த பொலிஸார், அவர்கள் இருவரையும் கைதுசெய்து நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அன்றிரவு முழுவதும், அவர்களை நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்திருந்த பொலிஸார், அவர்களைக் கைதுசெய்தமைக்கான காரணத்தை தெரிவிக்கவில்லை. மறுநாள் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்தனர். மறுநாள் நீதிமன்றத்தில் முற்படுத்தும்போது, அத்துமீறி அரச வனப்பகுதிக்குள் நுழைந்தமை, பொலிஸாரின் தடையை மீறி வாகனப் போக்குவரத்து செய்தமை ஆகிய குற்றங்களைக் குறிப்பிட்டு குற்றச்சாட்டுப் பத்திரத்தைத் தயார்படுத்தினர்.

இதற்கிடையில், ஆலயத்தின் நிர்வாகச் செயலாளர் துரைராஜா தமிழ்ச்செல்வம், வெளியிலிருந்து மறுநாள் இடம்பெறவுள்ள சிவராத்திரி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தார். 08..03.2024 அன்று காலை ஆலயத்திற்குப் பெருந்திரளான மக்கள் வாகனங்களிலும், கால்நடையாகவும் வருகைதந்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா எனப் பல மாவட்டங்களிலிருந்தும் மக்கள் வருகைதந்தனர். இவர்கள் அனைவரையும் பாலை மோட்டை சந்திப் பகுதியில் வழிமறித்த பொலிஸார் யாரையும் ஆலயத்திற்குச் சென்று வழிபட அனுமதிக்கவில்லை. கடுமையான வெயிலுக்கு நடுவிலும் வீதியிலேயே தடுத்து வைத்திருந்தனர். அவ்விடத்திற்கு வருகைதந்த தவத்திரு வேலன் சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரின் பிரசன்னத்தையடுத்து, பொலிஸாரின் தடுப்பு வேலிக்கு அப்பால் சென்று மக்கள் ஆலயத்தை நோக்கி நடக்கத்தொடங்கினர்.

பொலிஸாரால் மக்களைக் கட்டுப்படுத்த முடியாமல்போக, மக்கள் பயணித்த அனைத்து வாகனங்களையும் தடுத்து நிறுத்தினர். சைக்கிள் கூடச் செல்வதற்கு அனுமதிக்கவில்லை. கிட்டத்தட்ட 06 கிலோமீற்றர் தூரம் தமது வழிபாட்டுப் பொருட்களையும், நீரையும் சுமந்துகொண்டு மக்கள் நடந்தே சென்றனர்.

ஆலய வழிபாட்டுத் தேவைக்கும், குடிநீருக்காகவும் கொண்டுசெல்லட்ட தண்ணீர் பவுசரை வழிமறித்த பொலிஸார் அந்தத் தண்ணீரைத் திறந்து விட்டனர். ஆலயப்பகுதிக்குள் தண்ணீர் கேட்டுக் கதறியழுத குழந்தைகள் அருகில் பாய்ந்த அருவியின் நீரைப் பருக முயன்றனர். அவ்வாறு அருவியில் பாய்ந்த நீரைப் பருகச் சென்றவர்களையும் பொலிஸார் அடித்துத் துரத்தினர். மீறியும் அங்கிருந்து தண்ணீர் எடுத்தால், கைதுசெய்து சிறையில் அடைப்போம் என மிரட்டினர்.

பின்னர் அரசியல்வாதிகளும், மக்களும், இணைந்து வழிபாட்டுக்குரிய நீரினை எடுத்துச் செல்ல அனுமதிக்கக் கோரி போராட்டம் ஒன்றை நடத்தினர். இந்த விடயத்தை இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கும் கொண்டுவந்தனர். அதனையடுத்து அரை பவுசர் தண்ணீரை எடுத்துச்செல்ல பொலிஸார் அனுமதியளித்தனர். அந்த நீர் ஆலயச் சூழலுக்கு எடுத்துவரப்பட்டுச் சற்று நேரத்தில், அன்னதானத்திற்காக தயார்ப்படுத்தப்பட்டிருந்த உணவுப் பொருட்களையும், வழிபாட்டுப் பொருட்களையும் பொலிஸார் தம் சப்பாத்துக்கால்களால் தட்டிவிட்டனர். அனைத்து உணவுப்பொருட்களையும் நிலத்தில் கொட்டியதோடு, அவற்றை வைத்திருந்த சிறுவர், பெண்களையும் தாக்கினர். அனுமதித்த தண்ணீர் பவுசரையும் திறந்துவிட்டனர்.

இதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததோடு, இந்தச் சம்பவத்துடன் பலர் ஆலயச் சூழலிலிருந்து வழிபடாமலேயே வெளியேறினர். இதனையடுத்து நீதிமன்ற உத்தரவுடன் வருகைதந்த பொலிஸார், அதனை வாசித்துக்காட்டினர். அந்த நீதிமன்ற உத்தரவில் வழிபாடுகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளதே தவிர, தடைவிதிக்கப்படவில்லை என அங்கு கூடி நின்ற பக்தர்கள் சுட்டிக்காட்டியதையடுத்து, பொலிஸார் அவ்விடத்தை விட்டு வெளியேறினர். சற்றுநேரத்தின் பின்னர் அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் தொல்லியல் திணைக்களத்தின் கடிதத்தைக் காண்பித்து, 'மாலை 06 மணிக்குப் பின்னர் தொல்லியல் மையத்தில் நின்றால் தொல்பொருட்கள் சேதமடையும், எனவே அனைவரும் வெளியேற வேண்டும். வெளியேறத்தவறினால் கைதுசெய்யப்படுவீர்கள்' என எச்சரித்தனர். நீதிமன்றத்தீர்ப்பின்படி வழிபாட்டு உரிமைகள் உண்டு என்பதால் யாரும் அவ்விடத்திலிருந்து நகரவில்லை. சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதற்கிடையில், முதன்நாள் இரவு கைதுசெய்யப்பட்ட ஆலயப் பூசகரை நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்திருந்தது. அவரும் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அவ்வேளையில் தவத்திரு வேலன் சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட 80 பேர் வரையிலானவர்கள் ஆலயப் பகுதியில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

இரவு 7.30 மணியளவில் ஆலயத்தை நெருங்கிய பொலிஸார், அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர். பெண்கள், குழந்தைகள் கதறியழத் தாக்கியதோடு, அவர்களைத் தூக்கி வீசினர். சிவபக்தர்கள் 'ஓம் நவசிவாய ஓம் நவசிவாய 'என வேத மந்திரத்தை உச்சரிக்க உச்சரிக்க இழுத்து விழுத்தி தமது சப்பாத்துக்கால்களால் பொலிஸார் மிதித்தனர். பூசைப்பொருட்களை சப்பாத்துக்கால்களால் தட்டி உடைத்தனர். தொடர்ந்து ஆலயத்தின் நிர்வாகச் செயலாளர் துரைராஜா தமிழ்ச்செல்வம் கைதுசெய்யப்பட்டு, பொலிஸாரின் பேருந்தில் ஏற்றப்பட்டார். அதனையடுத்து ஆலயத்தின் பூசகர் தம்பிராசா மதிமுகராசா இரண்டாவது முறையாக கைதுசெய்யப்பட்டார். தொடர்ந்து மகேந்திரன் நரேந்திரன், சிவம் லக்சன், கந்தசாமி கௌரிகாந்தன், திலகநாதன் கிந்துஜன், இராசரத்தினம் விநாயகமூர்த்தி, சுப்பிரமணியம் தவபாலசிங்கம் ஆகிய எட்டுப்பேர் கைதுசெய்யப்பட்டனர். பா.தவபாலனை உள்ளாடையுடனேயே பொலிஸ் நிலையம் வரை பொலிஸார் அழைத்து வந்தனர். கைதுசெய்யப்பட்டவர்களை அழைத்துவரும்போது பொலிஸார் தாக்கினர்.

ஆலயச் சூழலில் மக்களோடு நின்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனைத் தூக்கி வீசிய பொலிஸார், அவ்விடத்திலேயே அவரை விட்டுச்சென்றனர். அங்கிருந்த அனைவரையும் துரத்திய பொலிஸார், தவத்திரு வேலன்சுவாமிகளை மட்டும் தனித்துவிட்டுச் சென்றனர். காட்டுப் பகுதியில் ஒருவர் தனித்து நின்றால் மிருகங்களால் தாக்கி கொல்லப்படும் அபாயம் இருந்தும், அவர் ஒரு சமயத்தலைவராக இருந்தபோதிலும் அதற்குரிய மரியாதையினைப் பொலிஸார் வழங்கவில்லை. அத்தோடு ஆலயத்தில் பூசைவழிபாடுகளுக்காக கொண்டுசெல்லப்பட்டிருந்த உணவுப் பொருட்கள், பாத்திரங்கள் அனைத்தையும் பொலிஸார் எடுத்துச்சென்றனர். இதன் பெறுமதி கிட்டத்தட்ட 18 லட்சம் ரூபா.. இற்றைவரைக்கும் இந்தப்பொருட்கள் ஆலய நிர்வாகத்திடம் மீளளிக்கப்படவில்லை.

அன்றிரவு பொலிஸ் நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்ட எட்டுப்பேரையும் உறவினர்கள் சந்திக்கவோ, உணவு வழங்கவோ பொலிஸார் அனுமதிக்கவில்லை. மறுநாள் காலை நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டியிருந்தும், மறுநாள் மாலை 4.30 மணிக்கே நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிபதி, கைதுசெய்யப்பட்டவர்களின் உடலில் அடிகாயங்கள் இருப்பதனால், அவர்களை வவுனியா மாவட்ட மருத்துவமனையில் உடனடியாக அனுமதித்து சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவச் சான்றிதழைப் பெறுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டபோதும் பொலிஸார் அதனைச் செய்யவில்லை. கைதுசெய்யப்பட்ட அனைவரையும் வவுனியா சிறைச்சாலைக்கு அழைத்துச்சென்று, அன்றிரவு முழுவதும் அங்கேயே தடுத்துவைத்திருந்தனர். மறுநாள் மதியம் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று, கைதுசெய்யப்பட்டவர்களில் ஆறு பேரை மாத்திரம் மருத்துவமனையில் அனுமதித்தனர். மருத்துவமனையில் அனுமதித்த பின்னரும்கூட அவர்களுக்கு உணவையோ, நீரையோ வழங்க சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை. மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டும் கூட, உணவு வழங்கப்பட்டுவிட்டது எனப் பொய் கூறினர்.

08.03.2024 அன்று கைதுசெய்யப்பட்டவர்கள் 12.03.2024 அன்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்றில் பொலிஸார் தொல்லியல் சின்னங்களை சிதைத்தமைக்கான தொல்லியல் திணைக்களத்தின் அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தமையால், வழக்கினை 19.03.2024 ஆம் திகதிக்கு நீதிபதி திகதியிட்டார். அதற்கிடையில் பொலிஸார் கைதுசெய்யப்பட்டவர்களால் ஆலயச்சூழலில் சிதைக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளைப் பெறவேண்டும் எனக் கட்டளையிடப்பட்டது.

11.03.2024 அன்று தொடக்கம் கைதுசெய்யப்பட்டவர்களில் துரைராஜா தமிழ்ச்செல்வம், த.மதிமுகராசா, சி.தவபாலசிங்கம், தி.கிந்துஜன், சி.விநாயகமூர்த்தி ஆகிய ஐவர் தொடர் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டபோதிலும், அதனை சிறைச்சாலை அதிகாரிகள் வெளியுலகத்திற்கு மறைத்தனர். இது குறித்து, ஊடகங்கள் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரிடம் கேள்வியெழுப்பியபோது, அப்படி யாரும் உண்ணாவிரதம் மேற்கொள்ளவில்லை எனப் பொய்யுரைத்தார்.

இந்த அநீதிகளுக்கு எதிராக வடக்கு - கிழக்கு முழுவதும் மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசியல் கட்சிகளும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், சிவில் சமூக அமைப்புக்களும் சர்வதேச நிறுவனங்களுக்கும், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் வலியுறுத்தின. இதனையடுத்து 19.03.2024 அன்று வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பொலிஸார் நீதிமன்றம் ஏற்கனவே கோரிய தொல்லியல் சின்னங்கள் சிதைக்கப்பட்டமைக்கான ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. சட்டமா அதிபரின் ஆலோசனை பெறுவதற்கான கால அவகாசத்தைக் கோரினர். இதனை ஏற்காத நீதிமன்றம் வழக்கினை தள்ளுபடி செய்ததோடு, கைதுசெய்யப்பட்ட எட்டுப்பேரையும் விடுவித்தது.

இந்தச் சம்பவங்கள் சொல்வதென்ன? இலங்கைத்தீவின் அதிகாரங்கள் அனைத்தும் பௌத்த பிக்குமாரின் கீழேயே கிடக்கின்றன. அவர்கள் சொல்வதைத்தான் நீதிமன்றமும், பொலிஸாரும் செய்வர் என்பதையே மீண்டும் மீண்டும் பௌத்த பெரும்பான்மைவாத அரசு தமிழர்களுக்கு நினைவுபடுத்துகின்றது. ■

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# பேபி கில்லருக்கு ஆப்பு!



ஆஸ்திரேலியாவில் மிகவும் மோசமான குற்றவியல் வழக்குகளில் ஒன்றாகக் கருதப்படும், தாயொருவர் தனது பெண் குழந்தையைக் கொலை செய்த வழக்கில், சந்தேகநபரான தாய்க்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது. அவர் 13 ஆண்டுகள் சிறை தண்டனையை எதிர்கொண்டிருந்தாலும் பிணை மறுக்கப்பட்டுள்ளது.

48 வயதான Keli Lane, 1996 இல் தனக்குப் பிறந்த மகளை கொலை செய்திருந்தார். அவருக்கு 2010 ஆம் ஆண்டு 18 வருடங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அவரின் குறைந்தபட்ச தண்டனைக் காலம் எதிர்வரும் மே மாதத்துடன் முடிவடைகின்றது.

இந்நிலையில் அவரைப் பிணையில் விடுவிக்கமுடியுமா என்பது தொடர்பில் நியூ சவுத் வேல்ஸ் மாநில பிணை ஆணையகம் பரிசீலித்தது.

மாநிலத்தின் அறிமுகப்படுத்தப்பட்ட no body, no parole சட்டத்தின் அடிப்படையில் அவருக்கு பிணை வழங்கமுடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் விசாரணைக்கும் அவர் திருப்திகரமாக ஒத்துழைப்பு வழங்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இவரது முழுமையான தண்டனைக் காலம் 2028 டிசம்பர் மாதமே முடிவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இது 1996 இல் நடந்த கொலைச்சம்பவம். ஆனால் அண்மையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச்சம்பவமானது ஒட்டுமொத்த ஆஸ்திரேலியாவையுமே உலுக்கியது.

மேற்படி கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரியான Beau Lamarre-Condon நியூசவுத் வேல்ஸ் காவல்துறையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

28 வயதான சிட்னி தம்பதிகளான Jesse Baird மற்றும் Luke Davies ஆகியோர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய காவல்துறை அதிகாரியான eau Lamarre-Condon கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ள நிலையிலேயே காவல் துறையில் இருந்து இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளார்.

கடமை நிமித்தம் வழங்கப்படும் துப்பாக்கியைப் பயன்படுத்தியே இருவரையும் இவர் சுட்டுக்கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

# இராஜதந்திர வியூகம்



ஆஸ்திரேலிய அரசியல் களத்தில் கடந்த மாதம் முக்கியமான பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தாலும் சீன வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரிட்டன் வெளிவிவகார செயலாளர் ஆகியோரின் கன்பரா வருகை இராஜதந்திர வட்டாரங்களில் பெரும் கவனத்தை ஈர்த்திருந்தது.

படைபட்டாளத்துடன் அல்லாமல் சத்தமின்றி வருகை தந்து சாதித்துவிட்டு பீஜிங் பறந்துள்ளார் சீன வெளிவிவகார அமைச்சர் Wang Yi.

தனது ஆஸ்திரேலிய பயணத்தின்போது பிரதமர் Anthony Albanese, வெளிவிவகார அமைச்சர் Penny Wong, முதலீட்டாளர்களுடனான சந்திப்பை அவர் நடத்தினார்.

ஆஸ்திரேலிய எழுத்தாளர் ang Hengjun க்கு சீனாவில் ஒத்திவைக்கப்பட்ட மரண தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் Penny Wong, சீன வெளிவிவகார அமைச்சரிடம் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

அதேபோல ஆஸ்திரேலிய ஏற்றுமதிகள்மீது சீனா விதித்துள்ள வரிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பற்றியும் பேசப்பட்டுள்ளது.

இதன் விளைவாக ஆஸ்திரேலிய வைன் மீதான வரி கட்டுப்பாடுகளை சீனா முழுமையாகத் தளர்த்தியுள்ளது. மார்ச் 29ஆம் திகதி இது அமுலுக்கு வந்துள்ளது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் முக்கியமான திருப்பமாகக் கருதப்படுகின்றது. அத்துடன், சீனப் பிரதமர் இவ்வருட இறுதிக்குள் ஆஸ்திரேலியா வருகை தரவுள்ளார்.

சீனாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான உறவு மேம்பட்டுவருகின்றது எனக் கூறப்பட்டுவந்தாலும் அவ்வப்போது இராஜதந்திர மோதல்கள் வெடிக்கவே செய்கின்றன.

'AUKUS' கூட்டணியை சீனா கடுமையாக எதிர்க்கின்றது. இது சீனாவுக்கு எதிரான கூட்டணியாகவே அந்நாடு கருதுகின்றது.

சீன வெளிவிவகார அமைச்சர் கன்பரா வந்திருந்த காலப்பகுதியில் தொடர்பில் ஆஸ்திரேலியாவுடன் பேச்சு நடத்தியுள்ளார் பிரிட்டிஷ் வெளிவிவகாரச் செயலாளர் டேவிட் கெமரூன்.

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத்தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெற்றால் 'AUKUS' க்கு என்ன நடக்கும் என்ற ஐயம் ஆஸ்திரேலியாவுக்கும் உள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவில் யார் ஆட்சிக்கு வந்தாலும் 'AUKUS' உடன்படிக்கை மற்றும் நேட்டோ கூட்டணி என்பன சிறந்த வடிவத்தைப் பெற வேண்டும் என டேவிட் கெமரூன் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேபோல பிரிட்டனுடன் புதிய பாதுகாப்பு உடன்படிக்கையிலும் ஆஸ்திரேலியா கைச்சாத்திட்டுள்ளது. இதன்மூலம் ரஷ்யப் படையெடுப்பில் இருந்து உக்ரைனைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட 'ட்ரோன்' கூட்டணியில் ஆஸ்திரேலியா இணைந்துள்ளது.

இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் இரு நாட்டுப் படைகளுக்கிடையிலான அணுகுமுறை எளிதாக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

'ட்ரோன்' கூட்டணியில் இணைவது உக்ரைனின் பாதுகாப்பு மட்டுமல்ல ,ஆஸ்திரேலியாவின் பாதுகாப்பையும் மேம்படுத்த உதவும் என்று பிரிட்டிஷ் தரப்பு தெரிவித்துள்ளது.

# சடலம் எங்கே?





மூன்று பிள்ளைகளின் தாயொருவர் காணாமற் போயிருந்த நிலையில், அவரது சடலம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், தேடுல் வேட்டையும், விசாரணை வேட்டையும் தொடர்கின்றன.

மர்மமான முறையில் காணாமல்போன மூன்று பிள்ளைகளின் தாயான Samantha Murphy இன் உடலைக் கண்டுபிடிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டு மற்றுமொரு தேடுதல் வேட்டையும் தோல்வியில் முடிந்துள்ளது.

Ballarat பகுதியில் இருந்து 11 கிமீ தொலைவில் உள்ள Buninyong Bushland Reserve பகுதியில் விக்டோரிய பொலிஸார் மார்ச் 20 ஆம் திகதி புதிய தேடுதல் நடவடிக்கையில் இறங்கினர். மேலும் பல படைபிரிவினரும் இணைந்தனர். மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

தன்னார்வ அமைப்பினரும் தேடுதலில் இணைந்து கொண்டனர்.

பிற்பகல் 2.30 மணியளவில் தேடுதல் நிறைவுக்கு வந்தது. எனினும், தடயம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

விசாரணைகளின்போது கிடைக்கப்பெற்ற புதிய தகவல்களின் அடிப்படையிலேயே இப்பகுதியில் தேடுதல் ஆரம்பமானது. காணாமல்போன இடத்தில் இருந்து 6 கி.மீ .தொலைவில் இப்பகுதி உள்ளது.

Ballarat கிழக்கு பகுதியில் நுரசநமய தெருவில் உள்ள தமது வீட்டில் இருந்து பெப்ரவரி 4 ஆம் திகதி வெளியில் சென்ற Samantha Murphy மீண்டும் வீடு திரும்பவில்லை. நடைப் பயிற்சிக்காகவே காலையில் வீட்டில் இருந்து சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து தேடுதல் வேட்டை இடம்பெற்றது. சிசிரிவி கமராக்காட்சிகளும் ஆராயப்பட்டன. தொலைபேசித் தரவுகளை அடிப்படையாகக் கொண்டும் விசாரணைகள் இடம்பெற்றன.

Samantha Murphy கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்தனர். இது தொடர்பில் 22 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கன்பரா - மொஸ்கோ மோதல்

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள ஆஸ்திரேலியத் தூதுவரை, ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் விசாரணைக்கு அழைத்துள்ள விவகாரம் இராஜதந்திர வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடத்தப்பட்டது. அத்தேர்தலில் புடின் வெற்றிபெற்று பதவியைத் தக்க வைத்துக்கொண்டார். எனினும், இது நீதியாக நடத்தப்பட்ட தேர்தல் அல்ல என ஆஸ்திரேலியா தெரிவித்திருந்தது.

அத்துடன், உக்ரைனில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட தேர்தல் உக்ரைனின் இறையாண்மையை ஆக்கிரமிக்கும் செயல் எனவும் ஆஸி. விமர்சித்திருந்தது. இது தொடர்பில் மாஸ்கோவில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்தின் 'எக்ஸ்' தளத்திலும் விமர்சனம் முன்வைக்கப்பட்டிருந்தது.

"இது ரஷ்ய ஒருமைப்பாட்டைக் கேள்விக்குட்படுத்தும் செயல், உள் விவகாரங்களில் தலையிடும் நடவடிக்கை. எனவே, தகவல்களை உடன் நீக்க வேண்டும். மீண்டும் அவ்வாறு நடக்காமல் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்." என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அறிக்கைமூலம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற புடினுக்கு வாழ்த்து தெரிவித்த மேற்கு ஆஸ்திரேலிய அரசியல்வாதியொருவர் கடும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளார்.

மேற்கு ஆஸ்திரேலிய கவுன்சிலரான





Adrian McRae என்பவரே இவ்வாறு வாழ்த்துத் தெரிவித்துள்ளார், இது தொடர்பான செய்தி ரஷ்ய அரச ஊடகத்திலும் வெளியாகியுள்ளது.

இவ்வருடம் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று நகரசபைக்கு தெரிவாகியுள்ள Adrian McRae என்பவரே ரஷ்ய ஜனாதிபதி புடினை புகழ்ந்து பேசியுள்ளார்.

"ரஷ்ய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் சுதந்திர சர்வதேசப் பார்வையாளராக நான் அங்கு சென்றேன்." - எனவும் Adrian McRae கூறியுள்ளார்.

எனினும், அவருக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

அவர் இன்னும் உள்ளாட்சி சபை உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பரபரப்பு செய்திகள்



# குற்றச்செயல்கள் தலைவிரிப்பு!

உலகில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் ஆஸ்திரேலியா 10 ஆவது இடத்தில் உள்ளது என்று தரவுகள் தெரிவித்தாலும் இங்கு நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது, வடிவேல் பாணியில் 'கிணத்தைக் காணோம்' என்கிற மாதிரி 'மகிழ்ச்சியைக் காணோம்' என்றே சொல்லத் தோன்றுகின்றது. ஏனெனில் அந்தளவுக்கு குற்றச்செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. விக்டோரிய மாநிலத்தில் இந்நிலைமை மோசமாக உள்ளது.

விக்டோரியாவில் குற்றங்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துவருவதை அவதானிக்க முடிகின்றது.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 659 ஆக அதிகரித்துள்ளன.

டிசம்பர் வரையான கடந்த 12 மாதங்களில் கார்க் கொள்ளை தொடர்பில் 56 ஆயிரத்து 810 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கார்க்கொள்ளைச் சம்பவம் 9 ஆயிரத்து 37 ஆல் எகிறியுள்ளது.

சொத்துகள் உட்பட மொத்தமாக 2 லட்சத்து 29 ஆயிரத்து 459 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது 18 வீத அதிகரிப்பாகும். மறுபுறத்தில் விக்டோரிய மாநிலத்தில் சிறார்கள் குற்றச்செயல்களில் ஈடுபடும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. 2023 இல் மாத்திரம் குற்றச்செயல்களின் எண்ணிக்கை 30 வீதத்தால் அதிகரித்துள்ளது.

சிறார்கள் வன்முறைகளில் ஈடுபடுவதும், சிறார் குற்றவாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவருவதால் அதிகாரிகள் கவலையடைந்துள்ளனர் என்று விக்டோரியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக 14 மற்றும் 17 வயதுக்குட்பட்ட சிறார்கள் மத்தியிலான குற்றச்செயல்களே சடுதியாக அதிகரித்துள்ளன.

2023 இல் 18 ஆயிரத்து 729 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன என்று புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன. ஆயிரத்து 311 தாக்குதல் சம்பவங்களும், 688 கார்த் திருட்டுச் சம்பவங்களும், 696 கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்று விக்டோரிய பொலிஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.

10 முதல் 13 வயதுக்கிடைப்பட்ட சிறார்களால் இழைக்கப்படும் குற்றங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக வைத்திருக்கும் துப்பாக்கிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு விக்டோரியா பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.


விக்டோரியாவில் சட்டவிரோதத் துப்பாக்கிகளின் எண்ணிக்கை தொடர்பில் அச்சம் நிலவிவரும் நிலையிலேயே பொலிஸார் இந்த அறிவித்தலை விடுத்துள்ளனர்.

மாநிலம் முழுவதிலும் இருந்து கடந்த வருடம் இவ்வாறு 20 சதவீதமான துப்பாக்கிகள் கையளிக்கப்பட்டன என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

விக்டோரியா மாநிலப் பொலிஸாரால் 125 கைத்துப்பாக்கிகள் உட்பட குறைந்தபட்சம் 2,665 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

ஆஸ்திரேலியாவில் 3.9 மில்லியன் துப்பாக்கிகள் பதிவுசெய்யப்பட்டு பாவனையில் உள்ளநிலையில், சுமார் 2 லட்சம் சட்டவிரோதத் துப்பாக்கிகள் இருப்பதாக ஆஸ்திரேலியா குற்றப்புலனாய்வுப் பிரிவு மதிப்பிட்டுள்ளது.

# விக்கிலீக்ஸ் விவகாரம்



ஆஸ்திரேலியப் பிரஜையான விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அமெரிக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா என பிரிட்டிஷ் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. இதுகுறித்து 3 வாரங்களுக்குள் பதில் அளிக்க நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த செய்தியாளர் ஜூலியன் அசாஞ்சே (வயது- 52) கடந்த 2006 ஆம் ஆண்டில் விக்கிலீக்ஸ் என்ற இணையத்தளத்தை தொடங்கினார். கடந்த 2010-இல் ஆப்கானிஸ்தான், ஈராக் போர் தொடர்பான இரகசிய ஆவணங்கள் இந்த இணையதளத்தில் வெளியாகின. இதில் அமெரிக்க இராணுவத்தின் பல்வேறு இரகசியங்கள் அம்பலப்படுத்தப்பட்டன.

இந்தச் சூழலில் பாலியல் வன்கொடுமை வழக்கில் ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்ய கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பரில் சுவீடன் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்தது. கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க கடந்த 2012-ம் ஆண்டில் பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் அவர் தஞ்சமடைந்தார்.

கடந்த 2019-ஆம் ஆண்டில் அவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு வாபஸ் பெற்றது. இதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பொலிஸார், ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்தனர். கடந்த 5 ஆண்டுகளாக தெற்கு லண்டனில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டு உள்ளார்.

அமெரிக்காவை உளவு பார்த்தமை, இராணுவ இரகசியங்களை திருடியமை உட்பட 17 குற்றச்சாட்டுகளை அசாஞ்சே மீது அந்த நாட்டு அரசு சுமத்தி உள்ளது. அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று அவரை நாடு கடத்த பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகம் கடந்த 2022-ஆம் ஆண்டு ஜூனில் ஒப்புதல் அளித்தது.

இதுதொடர்பான வழக்கு லண்டனில் உள்ள உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் விசாரித்து நேற்று முக்கியமான உத்தரவினைப் பிறப்பித்தார்.

"ஜூலியன்அசாஞ்சேஅமெரிக்காவுக்குநாடுகடத்தப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அந்த நாட்டு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அவரது கருத்து சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டும். அமெரிக்க குடிமகனுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு உரிமைகளை ஆஸ்திரேலியாவை சேர்ந்த அசாஞ்சேவுக்கும் வழங்க வேண்டும். அவர் மீதான வழக்கு விசாரணை நேர்மையாக நடைபெற வேண்டும். இவை குறித்து 3 வாரங்களுக்குள் அமெரிக்க அரசு பதில் அளிக்க வேண்டும்.

இல்லையென்றால் தொடர்ச்சியாக விசாரணை நடைபெறாது. அமெரிக்காவுக்கு நாடு கடத்தக் கோரும் வழக்கை எதிர்த்து மேல்முறையீடு செய்ய அசாஞ்சேவுக்கு அனுமதி வழங்கப்படும்" என்று நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டார். இவ்வழக்கின் அடுத்த விசாரணை மே 20 க்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதுகுறித்து ஜூலியன் அசாஞ்சேவின் மனைவி ஸ்டெல்லா கூறும்போது, "எனது கணவருக்கு தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைத்திருக்கிறது. இந்த வழக்கை அமெரிக்க அரசு கைவிட வேண்டும். இதற்கான உத்தரவை ஜனாதிபதி பைடன் பிறப்பிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



# எழுத்தொருபாகன் – பெருமாள் முருகன்

**எழுத்தாளர் பெருமாள் முருகன் நாவல், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் என 16 நூல்களும், 125-க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவரது 'பூக்குழி' நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு 2023 ஆம் ஆண்டுக்கான பன்னாட்டுப் புக்கர் பரிசுப் போட்டிக்கான பதின்மூன்று நாவல்கள் கொண்ட நெடும்பட்டியலில் இடம்பெற்றது. இந்தப்பட்டியலில் இடம்பெற்ற முதல் தமிழ் நாவல் இதுவே. நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்துக்கு இலக்கியம் பற்றி உரையாற்றுவதற்காக சிட்னி வருகை தந்திருந்த பெருமாள் முருகனுடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**

**நேர்கண்டவர்:**



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி






**எதிரொலி : முதலில் மிகச் சம்பிரதாயமான கேள்வி . முழுநேர வேலையில் இருந்து கொண்டு எழுத்தாளராகப் பணியாற்றுவது என்பது ஒரே நேரத்தில் இரட்டைக்குதிரைச் சவாரி செய்வது போன்றது. ஒரு குடும்பஸ்தனாக இருந்து கொண்டு இலக்கியம் படைப்பது மிகச் சிரமமான காரியம். குடும்பத்தின் பங்கில்லாமல் நிறைவேற்றுவது சிரமம். ஒரு தலைசிறந்த எழுத்தாளராக, இலக்கியவாதியாக இருப்பதற்கு உங்களது குடும்பத்தினர் எவ்வாறு உறுதுணையாக இருக்கிறார்கள்?**

**பெ.மு :** முழு நேர ஏ்தாளராக தமிழில் எழுதி குடும்பத்தை நடத்துவது கடினம் . இலக்கிய மற்றும் எழுத்து சம்பந்தமான விஷயங்களில் ஈடுபடும்போது எனது குடும்பம் என்றுமே தொந்தரவு கொடுத்ததில்லை. ஆதலால் என்னால் தொடர்ந்து எழுத முடிந்தது. நான் முழுநேர ஆசிரியன் . ஆதலால் போதுமான நேரத்தை இலக்கியத்திற்கு செலவழிக்க முடிந்ததில்லை. இப்பொழுது ஓய்வு பெற்ற பிறகு என்னால் போதிய நேரத்தை எழுத்திற்காக ஒதுக்க முடிகிறது. தமிழில் முழுநேர எழுத்தாளராக இருந்தால் போதுமான வருமானம் கிடையாது. ஆதலால் எழுத்தை நம்பி வாழமுடியாது. மற்ற மொழிகளில் குறிப்பாக ஆங்கிலத்தில் எழுதுபவர்கள் போதிய வருமானம் கிடைப்பதால் அவர்கள் முழுநேர எழுத்தாளராக இருக்க முடிகிறது .இப்போது தமிழில் அதற்கான சூழ்நிலை கனிந்து வருகிறது. நான் குடும்பத்தை விரும்பி ஏற்றுக்கொண்டவன். எனவே குடுபத்தை நான் என்றும் தொந்தரவாக நினைத்ததும் கிடையாது . அவர்கள் என்னை என்றுமே எழுத வேண்டாம் என்று சொன்னதும் கிடையாது. அதுவே பெரிய பக்கபலம். என்னுடைய எழுத்துக்களை எனது குடும்பத்தினர் முதலில் படித்துவிட்டு கருத்துக்களைத் தெரிவிப்பர். எனது மனைவி தான் எனது முதல் வாசகர்.

**எதிரொலி : நீங்கள் பேசும்போது தமிழ் எழுத்தாளனாக பிழைப்பை நடத்துவது கடினம் என்றீர்கள். உங்கள் பெரும்பாலான படைப்புகள் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அமோக வரவேற்பும், விருதுகளும் (JCB விருது, புக்கர் இறுதிப் பட்டியலில் இடம்) பெறுகின்ற சூழ்நிலையில் மூல மொழியில் அதாவது தமிழில் உங்கள் படைப்புகளுக்கு ஒப்பீட்டளவில் பெருவாரியான விருதுகள் (சாகித்ய அகாடெமி விருது ) கிடைக்காத சூழ்நிலையை எவ்வாறு பார்க்கிறீர்கள் ?**

**பெ.மு :** பல விருதுகள் எனக்கு கிடைத்திருக்கின்றன. அரசாங்கங்கள் அங்கீகரிப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆதலால் அதை முக்கியமாகக் கருத வேண்டுமென்பதில்லை. எத்தனையோ முக்கியமான எழுத்தாளர்களுக்கு இன்னும் சாகித்ய அகாடெமி விருது கிடைக்கவில்லை. சுந்தர ராமசாமிக்கு அந்த விருது கிடைக்காத காரணத்தால் அவரது எழுத்து ஒன்றும் குறைந்து போகவில்லை.

**எதிரொலி : தமிழ் சார்ந்த அரசியல்தான் இதற்குக் காரணமென்று நினைக்கிறீர்களா ?**

**பெ.மு :** அரசு சார்ந்த விருதுகள் அனைத்திருக்கும் பின்னால் பல்வேறு அரசியல்கள் இருக்கத்தான் செய்யும். அதாவது அரசுக்கு ஆதரவாக எழுதுகிறாரா ? இல்லை எதிராளியா ? அதற்காக அது போன்ற விருதுகள் கிடைக்காதது குறித்து எந்த வருத்தமும் கிடையாது. பொதுவாக எனக்கு எந்த விருதுகள் குறித்தும் பெரிய ஆர்வமோ ,விருப்பமோ கிடையாது . கிடைக்கவில்லை என்றும் வருத்தமும் கிடையாது .எனது எழுத்திற்கு போதுமான அளவில் அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்திருக்கிறது. இன்னும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எப்போதும் இருக்கிறது.

**எதிரொலி : நீங்கள் சிட்னியில் நடந்த இலக்கிய விழாவில் பேசும்போது கவிதை என்பது உங்களுக்குப் பிடித்த வடிவம் என்று சொன்னீர்கள். முதலில் கவிதை எழுதி பிறகு சிறுகதைகள், அதன்பிறகு நாவலுக்கு வந்திருக்கிறீர்கள் . எந்த வடிவத்தில் நீங்கள் சொல்ல வேண்டியதை சொல்வது சுலபம் என்று நினைக்கிறீர்கள் ?**

**பெ.மு :** ஒவ்வொரு இலக்கிய வடிவத்திற்கும் ஒவ்வொரு இயல்பும், தனித்தன்மையும் இருக்கின்றன. ஆதலால் இந்த விஷயத்தை வெளிப்படுத்த இந்த வடிவம் தான் சிறந்தது என்று சொல்ல முடியாது. என்னைப் பொறுத்த வரைக்கும் கவிதை மிகுதியாக உணர்வு சார்ந்தது. அறிவின் பங்கு குறைவாக இருக்கும். மற்ற வடிவங்களில் அறிவின் பங்கு மிகுதியாகவும் ,உணர்வின் பங்கு குறைவாக இருக்கும். எனக்கு எல்லா வடிவங்களும் சில சமயங்களில் இலகுவாகவும் ,சில சமயங்களில் கடினமாகவும் இருக்கும். அதற்கான நேரத்தைத் தரவேண்டும். சில சமயங்களில் நாட்கள், வருடங்கள் காத்திருக்கவேண்டும். ஒவ்வொரு வடிவத்திற்கும் அதற்கான காலம் வரும்வரை காத்திருக்க தயாராக இருப்போமானால் எல்லா வடிவங்களும் சுலபமே.

**எதிரொலி : சிறுகதைகளின் மன்னரான அசோகமித்திரன் சுருங்கக் கூறுவதில் நிபுணர். அவரைப்போன்று உங்களது பல சிறுகதைகள் சொல்லவேண்டிய உணர்வுகளைச் சுருங்க கூறுகின்றன. உணர்வுகளை வெளிப்படுத்துவதில் உங்களைப் பொறுத்தவரை சிறுகதைகள் போதுமானதா இல்லை நாவல்களின் தேவை வேண்டுமென்று நினைக்கிறீர்களா? ஒரு எழுத்தாளராக எந்த வடிவம் உங்களுக்கு போதுமான சுதந்திரத்தைத் தருகிறது ?**

**பெ.மு :** நாவல் எழுதும்போது எங்கு வேண்டுமானாலும் ,எதை வேண்டுமானாலும் சொல்லக்கூடிய அல்லது சஞ்சாரம் நிகழ்த்தக்கூடிய சுதந்திரம் நமக்குக் கிடைக்கிறது. அது பரந்த விரிந்த மைதானம் போன்றது. ஒரு பக்கம் கிரிக்கெட் விளையாடலாம் , மறுபுறம் கால்பந்து விளையாடலாம். கபடி விளையாடலாம். அதுபோன்று பலவிதமான விஷயங்களைச் சொல்லக்கூடிய சுதந்திரம் நாவலில் இருக்கிறது.

**எதிரொலி: ஆனால் நாவலில் எல்லா விஷயங்களையும் சொல்லிக்கொண்டு போகும் போது, வாசகனின் கவனம் சிதறி, சொல்ல வேண்டிய விஷயம் கிடைக்காமலே போய் விடக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறதல்லவா ?**

**பெ.மு :** அப்படியெல்லாம் கிடையாது. நாவல் என்பது பேரனுபவத்தைத் தரக்கூடிய வடிவம். நாவல் என்பது கருத்துக்களைச் சொல்லக்கூடிய வடிவம் கிடையாது .அது வாழ்க்கையின் அனுபவங்களைச் சொல்லக்கூடிய வடிவமாகும். ஆதலால் வாசிக்கக்கூடிய வாசகனை அந்தப் பேரனுவபத்திற்கு தன்னகத்தே கூட்டிக்கொண்டு சென்றுவிடும்.

**எதிரொலி : ஒரு தேர்ந்த வாசகனால் அந்த பேரனுபத்தைக் கிரகித்துக்கொள்ள முடியும். ஆனால் ஒரு ஆரம்பநிலை வாசகனுக்கு இந்த பலவிதமான சம்பவங்கள், அனுபவங்களை அடுக்கிக்கொண்டே செல்லும்போது ,அவ்வனுபவங்களே ஒரு தடையாகிவிடும் வாய்ப்புகள் உண்டு தானே ?**

**பெ.மு :** ஆரம்பநிலை வாசகன் தேர்ந்த வாசகன் ஆகும்போது கிடைக்கும். அவ்வளவு தான். எந்த ஒரு வேலையும் ஆரம்பத்தில் சிரமம் தானே. மீண்டும் செய்யச்செய்ய அதன் நுணுக்கங்களைக் கற்றுவிடுவோம் இல்லையா. அதேபோன்று தான் வாசிப்பும்,வாசகனும். ஆரம்ப நிலை வாசகனுக்கு அதற்கான நாவல்கள் இருக்கின்றன .எனது நாவல்களில் தொடக்க நிலை வாசகருக்கு 'பூனாச்சி' நாவலைப் படிக்க சொல்வேன். வாசிப்பும் ஒரு பயிற்சி தான். தொடர்ந்து ஈடுபடும்போது அதன் நுட்பங்கள் விளங்கிவிடும்.

**எதிரொலி : உங்களது எந்த நாவல்களையும் தனித்தனிப் பகுதிகளாக பிரித்ததில்லை. ஆனால் உங்களின் 'கூளமாதாரி 'நாவலில் மட்டும் புழுதி, கொழுமன் மற்றும் பரல் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்து எழுதியிருக்கிறீர்கள். இது கதாபாத்திரங்களின் மனநிலை சார்ந்து எடுக்கப்பட்ட முடிவா? வாசகன் படித்து எளிதில் உள்வாங்கக்கூடும் என்பதற்காக எடுக்கப்பட்ட முடிவா ?**

**பெ.மு :** பொதுவாக எந்த நாவலின் அமைப்பும் கதையில் வரக்கூடிய தொடக்கம், சிக்கல், அதன் வளர்ச்சி பிறகு அதன் முடிவு என்றவாறு இருக்கும். ஆனால் கூளமாதாரி நாவலைப் பொறுத்தவரைக்கும் அப்படியான எதுவும் கிடையாது . ஒரு வாழ்க்கை முறை பற்றியே அமைந்திருக்கும். நாவலைப் படித்த பதிப்பாளர் கூட' என்ன இது? இந்த நாவல் முழுவதும் ஆடு மேய்க்கிறார்கள். வேறு ஒரு நிகழ்வுமில்லையே" என்று கூறியிருக்கிறார். ஆடு மேய்ப்பவர்கள் வாழ்வில் நடக்கும் நுட்பமான நிகழ்ச்சிகளை சொல்லக்கூடிய நாவல் அது . கடைசிப்பகுதியில் மட்டுமே சிக்கல் தோன்றி, முடிவு கிடைக்கும். நாவலின் வடிவம் அவ்வாறு அமைந்ததனால் வாசகனுக்கு படிப்பதற்கு எளிதாக இருக்க வேண்டுமென்று மூன்று பகுதிகளாகப் பிரித்தோம்.

**எதிரொலி : உங்களின் கங்கணம் நாவல் கல்யாணத்திற்கு பெண் தேடி அலைகின்ற முதிர் வாலிபனைப் பற்றிய கதை. எனக்கு தெரிந்தே நிறைய இளைஞர்கள் 35 வயதாகியும் பெண் கிடைக்காமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இப்போதுள்ள தமிழ்நாட்டின் சூழ்நிலையை பிரதிபலிக்கும் நாவலை அப்போதே எழுதியிருக்கிறீர்கள். இதற்கான காரணம் 80 -90 களில் நடந்த பெண் சிசுக்கொலைகள் தான் என்று சொல்லியிருந்தீர்கள். இப்போதுள்ள சூழ்நிலைக்கும் அது தான் காரணமா ?**

**பெ.மு :** 1980-90 களில் ஸ்கேன் செய்து பாலினத்தை கண்டுபிடித்து பெண்சிசுக்களை கருவிலேயே அழித்துவிடும் நிலை இருந்தது. இப்போது கல்யாணத்திற்கு பெண் தேடி அலைபவர்கள் வயது 30க்கு மேல் தான். 2000 வருடத்திற்கு பிறகு பெண் குழந்தைகளின் சராசரி ஆண் குழந்தைகளுடன் ஒப்பிடும்போது குறைவு. அதுவே இப்போது பல இளைஞர்கள் திருமணத்திற்கு பெண் கிடைக்காமல் இருப்பதற்கு காரணம்.

**எதிரொலி : கங்கணம் மிக முக்கியமான நாவல். மாதொரு பாகனுக்கு கிடைத்த வரவேற்பு (சர்ச்சையினால்) அதற்கு கிடைக்கவில்லை என்று நினைக்கிறன். அது மட்டுமின்றி அந்த நாவலில் வந்த சில சம்பவங்கள் திரைப்படங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்பட்டேன். உங்களின் அனுமதி பெறாமல் இவ்வாறு சம்பவங்களை திரைப்படங்களில் பயன்படுத்துவதை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பெ.மு:** பொதுவாக நிறைய நாவல்கள், சிறுகதைகளிலிருந்து காட்சிகளை தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் எடுத்துக்கொள்வது வழக்கம் தானே. காட்சிகளை மிக சாதுர்யமாக மாற்றியமைத்து திருடியது போல் தெரியாமல் காட்டிக்கொள்வதும் இங்கே நடக்கிறது. மலையாளத்திரையுலகில் எழுத்தாளர்களுக்கு அங்கீகாரமும் ,பங்களிப்பும் கிடைக்கிறது. ஒப்பீட்டளவில் இங்கே இன்னும் மாற வேண்டும்.

**எதிரொலி : உங்களது பூக்குழி நாவல் திரைப்படமாக்கப்படுகிறது என்று கேள்விப்பட்டேன். உங்களது பங்களிப்பு திரைக்கதையில் இருக்கிறதா? இல்லை உங்கள் கதையை மட்டும் வைத்துக்கொண்டு முழுதாக இயக்குநர் திரைக்கதையினை எழுதியுள்ளாரா ?**

**பெ.மு :** நான் வசனம் மட்டும் எழுதியுள்ளேன். திரைக்கதையை இயக்குநர் எழுதியுள்ளார்.

**எதிரொலி : சுஜாதாவின் பல கதைகள் திரைப்படமாகியபோது அந்த படத்தின் இயக்குநர்கள் அந்தக் கதையினை சிதைத்து விட்டதாக அவரே சொல்லியிருக்கிறார். உங்கள் கதைகள் படமாகும்பொழுது நீங்கள் திரைக்கதையை எழுதினால் சிதைவிலிருந்து காப்பாற்ற வாய்ப்பு இருக்கிறதல்லவா ?**

**பெ.மு :** சினிமா வேறு ஒரு ஊடகம். நாவல் திரைப்படமாகும்பொழுது அந்த வடிவத்திற்கு ஏற்றபடி இயக்குநர்கள் திரைக்கதையில் மாற்றம் செய்வது இயல்பு தானே. என்னுடைய கதையில் பெரிய மாற்றங்களில்லை . ஆனால் ஒரு சில மாற்றங்கள் இருக்கின்றன.

**(15ஆம் பக்கம் பார்க்க)**

# எழுத்தொருபாகன் – பெருமாள் முருகன்



(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு இயக்குநர் அவரது கோணத்தில் படமாக்கும்பொழுது சில சில மாற்றங்கள் செய்வது அவரது உரிமை. என்னுடைய கோணத்திலேயே அவர் கதையைப் பார்க்கவேண்டும் என்றும் அவசியம் கிடையாது தானே .

**எதிரொலி : பூக்குழி நாவலில் நீங்கள் எடுத்துக்கொண்ட “நிறம் சார்ந்த அணுகுமுறை” மிகவும் வித்தியாசமான முயற்சி. அதாவது ஒரு தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்த பெண் அனைவரும் பொறாமை கொள்ளும் வகையில் அப்படி ஒரு சிவப்பு நிறம். நிறம் சார்ந்து ஒரு மனிதனை மதிப்பிடல், சாதிய ஒடுக்குமுறை பற்றியெல்லாம் உங்களது அபிப்ராயம் என்ன ?**

**பெ.மு:** நிறம் சார்ந்து நமக்கு நிறைய தப்பான அபிப்ராயங்கள் இருக்கின்றன. கிராமப்புறங்களில் அனைத்து இனத்தவருமே கறுப்பாகவோ அல்லது மாநிறமாகவோ தான் இருப்பார்கள். தாழ்த்தப்பட்ட இனத்தில் நிறைய பேர் நல்ல சிவப்பு நிறத்தில் இருக்கின்றனர். கறுப்பாக இருந்தாலே அவன் தாழ்த்தப்பட்ட சாதி எனும் மனநிலை இருக்கிறதல்லவா. அந்தக் கண்ணோட்டத்தை மாற்ற வேண்டுமென்று தான் நான் அவ்வாறு எழுதினேன். பொதுப்புத்திக்கு எதிரான நிலையில் எழுதினேன் .

**எதிரொலி : உங்களது சிட்னி உரையில் உங்களுக்கு நடந்த தீண்டாமைக் கொடுமை பற்றிச் சொல்லியிருந்தீர்கள். அதாவது முருகன் என்ற உங்களது பெயரை வைத்து நீங்கள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்று கருதிக்கொண்டு உங்களுக்கு தண்ணீர் கூட கொடுக்கவில்லை. ஆதலால் யாராவது சம்ஸ்கிருத பெயர்கள் வைத்தால் நான் அதனை வரவேற்பேன் என்று சொன்னீர்கள். உங்களது அந்த சிந்தனைக் கண்ணோட்டம் வித்தியாசமாக இருந்தது .**

**பெ.மு :** ஒரு தர்க்கத்திற்காக நான் சமஸ்கிருதத்தில் பெயர் வைக்கலாம் என்று சொன்னேன். சாதிய அடையாளம் காணமுடியாத நல்ல தமிழ்ப்பெயர்கள் நிறைய இருக்கின்றன. அதனைக் குழந்தைகளுக்குச் சூட்டலாம்.

**எதிரொலி : நீங்கள் பேசும்போது சங்க இலக்கியத்தினைப் படிப்பதற்கு நல்ல உரைகளைப் படிக்க வேண்டுமென்று சொன்னீர்கள். நல்ல உரைகள் எவையென்று கண்டுபிடிப்பதே மிகப்பெரிய சவால். நீங்கள் வ.சுபமணிக்கம் எழுதிய கம்பர் என்ற புத்தகம் பற்றிக் கூறினீர்கள். நல்ல உரைகள் பற்றிய தகவல்கள் கிடைப்பதே சவாலாக இருக்கும்போது மாணவர்கள் எவ்வாறு சங்க இலக்கியங்களைப் படிக்க முடியுமென்று நினைக்கிறீர்கள் ?**

**பெ.மு :** நல்ல தமிழாசிரியர்கள் அல்லது என்னைப் போன்று அந்தத் துறையில் ஈடுபாடு உள்ளவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம் அல்லவா? தமிழ் படித்தவர்களையும், தமிழாசிரியைகளையெல்லாம் நாம் பெரிதாக மதிப்பது கிடையாது. ஆதலால் அவர்களிடம் ஆலோசனை கேட்பது கிடையாது. ஒரு உதாரணத்திற்கு என்னிடம் யாராவது சிலப்பதிகாரம் படிக்கவேண்டுமென்றால், என்னென்ன அடிப்படை நூல்கள், உரைகள் படிக்க வேண்டுமென ஆலோசனை கூற முடியும். ஒரு அறிவியல் துறை சம்பந்தமான சந்தேகங்களுக்கு நாம் துறை சார்ந்த வல்லுநரை அணுகும்போது ஏன் இலக்கியத்திற்கு நாம் வல்லுநர்களை அணுகுவதில்லை? அவ்வாறு அணுகினால் இந்தப் பிரச்சினைகளை எளிதாகத் தீர்க்க முடியும்.

**எதிரொலி : ’ஜேசிபி’இலக்கிய விருது கடந்த 6 வருடங்களில் மூன்று முறை மலையாள நாவலின் மொழிபெயர்ப்புக்கு கிடைத்திருக்கிறது. அதற்கு அந்த எழுத்தாளர்களெல்லாம் ஒற்றுமையாக ஒரு அமைப்பாக செயல்படுவது தான் காரணமென்று சொன்னீர்கள். அந்த மாதிரி சூழ்நிலை தமிழில் இல்லையே ? தமிழில் ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ்ணன் , சாரு நிவேதிதா என்று வெவ்வேறு குழுக்கள் இயங்குகின்றன . தமிழில் புதிதாக படிக்க வரும் வாசகனுக்கு இவ்வாறான குழுக்கள் இருப்பதால் சிரமமென்று நினைக்கிறீர்களா ?**

**பெ.மு :** புதிதாக வாசிக்க வருபவர்கள் அவர்களே நல்ல இலக்கியத்தைக் கண்டு கொள்வார்கள். அதிலென்ன சிரமம் இருக்கிறது? எந்தக்குழுவிலும் இணையாமல் இருக்கும் எவ்வளவோ நல்ல வாசகர்கள் இருக்கிறார்கள். தொடக்க நிலையிலிருக்கும் வாசகர்கள் பரிந்துரைகள் , விமர்சனங்களிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வாசித்து நல்ல இலக்கியம் என்ன என்பதை அவர்களே கண்டு கொள்வார்கள் .

**எதிரொலி : அந்தத் தடைகளை எல்லாம் தாண்டி வரும்முன்பு சோர்வடைந்து வாசிப்பைக் கைவிட்டுவிடும் வாய்ப்பும் இருக்கிறதல்லவா ?**

**பெ.மு :** இலக்கிய உலகத்திற்கு வந்த பிறகு அந்தத் தடைகளைத் தாண்டி வர நிறையப் புத்தகங்கள் இருக்கின்றன . இப்போதே தடைகள் என்று சொன்னால் நாங்கள் படிக்க வந்த காலத்தில் புத்தகங்கள் கிடைப்பதே சிரமம். ஒரு கட்டுரையில் ஏதாவது புத்தகம் பற்றி எழுதியிருந்தால் ஒவ்வொரு நூலகமாக தேடியலைந்து படிக்கும் காலம் இருந்தது. இப்பொழுது இருக்குமிடத்தில் இருந்து கொண்டே நினைத்த நேரத்தில் நினைத்த புத்தகங்களைப் படிக்கும் வசதி இருக்கிறது .

**எதிரொலி : கேரளாவில் எல்லா எழுத்தாளர்களும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஒரு குழு மற்றொரு குழுவை கருத்து வேறுபாடுகள் இருந்தும் அங்கீகாரம் செய்கின்றது. ஆகையால் மொழிபெயர்ப்புகளைக் கொண்டு செல்வதால் எல்லா விருதுகளும் கிடைக்கின்றன. தமிழில் அது போன்று ஆரோக்கியமான சூழ்நிலை இல்லையே ?**

**பெ.மு:** தமிழில் அதுபோன்று வரவேண்டுமென்று தான் நான் சொல்கிறேன். அதனால் தான் மலையாள இலக்கிய உலகை ஒப்பிட்டுச் சொன்னேன் .

**எதிரொலி : உங்கள் நாவல்களில் எல்லாம் பேசாப் பொருளை துணிந்து எழுதுகிறீர்கள் .அதாவது ஏறுவெயில் நாவலில் வளர்த்தவளிடமே பாலுறவு கொள்ள எண்ணுவது , ஆளண்டாப் பட்சியில் தம்பி மனைவியிடமே வல்லுறவு செய்வது, மாதொருபாகனில் 14ஆம் நாள் திருவிழா போன்று சமூகத்தில் பேசப்படாத விஷயங்களை உங்கள் நாவல்களில் சொல்கிறீர்கள். கதை எழுதும்போது அதுவாகவே வந்து விடுகிறதா? இல்லை இதனை எழுதவேண்டுமென்று திட்டம் செய்து எழுதுகிறீர்களா ?**

**பெ.மு :** அப்படியெல்லாம் கிடையாது. சமூகத்தில் நடக்கிற விஷயங்கள் தான் . முந்தைய தலைமுறை எழுத்தாளர்கள் இவ்வாறான விஷயங்களை எழுதத் தயங்கினர் . இப்பொழுது எல்லா எழுத்தாளர்களும் எழுதுகிறார்கள். இதற்கெல்லாம் கால மாற்றம் தான் காரணம் .

**எதிரொலி : கால மாற்றத்தோடு வாசகர்களும் முதிர்ச்சியடைந்து எல்லாவற்றையும் இப்போது இயல்பாக ஏற்றுக்கொள்கிறார்கள் தானே ?**

**பெ.மு :** ஆமாம். நான் ஏறுவெயில் நாவலில் எழுதிய கெட்டவார்த்தைகளையெல்லாம் படித்து விட்டு என்னைத் திட்டிய வாசகர்கள் அதிகம். இப்போது காலமாற்றத்தினால் அதெல்லாம் வெகு இயல்பாகி விட்டது. இப்போது திரைப்படங்களில் மற்றும் முவுவு தொடர்களில் கெட்ட வார்த்தைகள் வெகு சாதாரணமான இயல்பான ஒன்று ஆகிவிட்டது. என்னை தொடக்கத்தில் எல்லாரும் இவர் அதிர்ச்சியடைவதற்காக எழுதுகிறார் என்று சொன்னார்கள். யாரும் பேசாத மற்றும் ஒதுக்கும் விஷயங்களையெல்லம் எழுதவேண்டுமென்று நினைப்பவன் நான்.

**எதிரொலி : உங்கள் படைப்புகளை படிக்கும்போது நீங்களும் எழுத்தாளர் சு.வேணுகோபாலும் ஒத்துப்போவதுபோல் தெரிகிறது.அவரும் இவ்வாறு சமூகத்தில் பேசப்படாத மனித மனதின் இழிநிலையை எழுதக் கூடியவர் . யாரவது உங்களிடம் இவ்வாறு சொல்லியிருக்கிறார்களா ?**

**பெ.மு :** இல்லை. நானும் அவர் கதைகளைப் படித்திருக்கிறேன். நீங்கள் தான் புதிதாகச் சொல்கிறீர்கள். இது ஒரு புதிய பார்வைக்கோணம்.

**எதிரொலி : உங்களது கெட்ட வார்த்தை பேசுவோம் புத்தகத்தில் அல்குல் பற்றி பெரிய ஆராய்ச்சியே பண்ணியிருப்பீர்கள். கி.வா. ஜா வின் இடக்கரடக்கல் ,அண்ணாவின் கம்பரசம் பற்றியெல்லாம் எழுதியிருப்பீர்கள். பொதுவாக நமது சமூகத்தில் ஆங்கிலத்தில் கெட்ட வார்த்தை பேசினால் மரியாதை என்றும், தமிழில் பேசும்போது அவமானமென்று கருதும் மனநிலையை எவ்வாறு பார்க்கிறீர்கள் ?**

**பெ.மு :** நமது சமூகம் ஒரு இரட்டைச்சமூகம் என்று சொல்வார்கள் .வெளியே ஒருவாறு காட்டிக்கொண்டு உள்ளே வேறுமாதிரி இருப்பார்கள். அந்த மனநிலையை உடைக்க வேண்டுமென்று தான் நான் அந்த வகையான கட்டுரைகளை எழுதினேன். ஒரு வசைச் சொல்லை ஆங்கிலத்தில் சொல்வதும் இடக்கரடக்கலின் ஒருவகைதான். நாம் கழிப்பறை என்றோ கக்கூஸ் என்றோ சொல்ல மாட்டோம். ‘டாய்லெட்’ என்போம். இப்போது ரெஸ்ட் ரூம், வாஷ் ரூம் என்றெல்லாம் வந்துவிட்டது. ஒருமொழிக்குள்ளேயே இடக்கரடக்கல் உண்டு. இன்னொரு மொழிச் சொல்லைப் பயன்படுத்திப் பேசுவதும் ஒருவகை இடக்கரடக்கல்தான்.

**எதிரொலி : உங்களது வேப்பெண்ணெய்க் கலயம் சிறுகதை தொகுப்பில் எல்லாக் கதைகளையும் நான் படித்திருக்கிறேன் . அதில் குறிப்பாக கோம்பைச்சுவர் கதை , தி.ஜானகிராமனின் பாயசம் கதையின் பாதிப்பு இருந்தது போல் தோன்றியது. நீங்கள் அவ்வாறு பாதிப்பில் எழுதவில்லையென்று நினைக்கிறேன் .**

**பெ.மு :** அப்படியெல்லாம் இல்லை. அது ஊர்ப்பக்கம் நடந்த உண்மைச்சம்பவம் அதையொட்டி ஒரு சிறுகதையாக எழுதினேன்.

**எதிரொலி : உங்களின் கதைகளிலெல்லாம் மனிதனின் ஆதுர உணர்ச்சிகளை அதாவது சோகம்,துக்கம்,கோபம்,பொறாமை , காமம், குரோதம் , ஆற்றாமை பற்றி மிக எளிமையாக நேரிடையாக எழுதியிருக்கிறீர்கள். உங்களின் ஆரம்பக்கதைகளிலிருந்தே இந்த உத்தியைக் கடைப்பிடித்தீர்களா? இல்லை தொடர்ச்சியாக எழுதி இந்த நடை வந்துவிட்டதா ?**

**பெ.மு :** அதை நீங்கள் தான் சொல்லவேண்டும். உங்களை மாதிரி வாசகர்கள் தான் படித்துச் சொல்ல வேண்டும் .தொடக்கத்திலிருந்து கூறும் முறையில் மாற்றம் வந்திருக்கலாம். கருக்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒருவேளை மாற்றம் வந்திருக்கலாம் .ஆனால் தொடக்கத்திலிருந்து பார்வை ஒரே போன்று தான் இருக்கிறது என்று நினைக்கிறேன் .

**எதிரொலி : உங்களின் ஏறுவெயில் கதையில் வரும் தாத்தா ஒரு தாழ்த்தப்பட்ட சாதியின் பிணத்தை எட்டி உதைத்தல் போன்று உங்களது எல்லாக் கதைகளிலும் தீண்டாமைக்கொடுமை பற்றி தொடர்ச்சியாக எழுதியிருக்கிறீர்கள். தொடர்ச்சியாக நாற்பது ஆண்டுகள் திராவிடக் கட்சிகள் ஆட்சி செய்தபோதும் இன்னும் தீண்டாமைக் கொடுமை தமிழ்நாடெங்கும் இருக்கிறதே. நம் தமிழ் சமூகத்தின் இந்த மனநிலைக்கு என்ன காரணமென்று நினைக்கிறீர்கள் ?**

**பெ.மு:** எந்த மாற்றமும் வரவில்லையென்றெல்லாம் சொல்ல முடியாது .நிறைய மாற்றங்கள் வந்திருக்கின்றன . பெரியார் கூறியபடி ஆயிரமாயிரம் ஆண்டு காலமாக இந்தச் சமூகத்தில் புரையோடியிருக்கும் தீண்டாமை என்னுடைய காலத்திலேயே மாறிவிடாது. இதற்கெல்லாம் காலம் எடுக்கும். அதை முழுமையாக ஒழிப்பதற்கு இன்னும் கடுமையாகப் போராட வேண்டும் . ஐம்பது , நூறு வருடங்களுக்கு முன்னே ஒப்பிடும்போது நிறைய மாற்றங்கள் வந்திருக்கின்றன .

**எதிரொலி : ஆனால் இன்னும் கௌரவக் கொலைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன இல்லையா ?**

**பெ.மு :** ஆமாம். ஆனால் கௌரவக்கொலைகள் நடப்பது எல்லோருக்கும் தெரிய வருகிறது. குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை கிடைக்கிறது அல்லவா. முன்பெல்லாம் இப்படி ஒன்று நடக்கிறது என்று யாருக்கும் தெரியப்படுத்தவே பயந்த சூழ்நிலை இருந்தது .அதெல்லாம் மாற்றங்கள் தானே .

**எதிரொலி : ஆனால் மக்களின் மனநிலையில் ஒன்றும் பெரிய மாற்றங்கள் வந்துவிடவில்லையே ?**

**பெ.மு :** பெரும்பான்மையோர் சாதியை ஆதரிக்கின்ற மனநிலை கொண்டவர்களே .ஆனால் கொலை செய்யும் மனநிலைக்கு செல்பவர்கள் மிகச்சிலரே. அதுவும் மாறும். இப்போதுள்ள சட்டதிட்டங்கள் ,சமூக ஊடங்களின் வளர்ச்சி காரணமாக அந்த மனநிலையிலும் மாற்றம் வரும் .

**எதிரொலி : நான் பள்ளிக்கூடம் படித்த காலத்திற்கும் இப்போதுள்ள பள்ளி மாணவர்களின் மனநிலைக்கு பெரிய மாற்றம் இருக்கிறதே. பள்ளிகளில் கயிறு கட்டிக் கொண்டு வருதல் , பெயரில் சாதியை சேர்த்து அழைத்தல் போன்று பல உதாரணங்களை சொல்லலாம்.**

**பெ.மு :** அதையெல்லாம் வைத்து நீங்கள் சாதிவெறி அதிகமாகி இருக்கிறது என்று சொல்லக்கூடாது. முன்னர் தங்களது சாதியை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவையில்லாமல் இருந்தது. ஏனென்றால் முன்பெல்லாம் ஒடுக்கப்பட்ட சாதியினர் சாதியத் தீண்டாமையை ஏற்றுக்கொண்டு அடங்கி ஒடுங்கி இருந்தனர் .இன்று அப்படியெல்லாம் இல்லை.இப்போது ஒடுக்கப்பட்ட சாதியினர் தமக்கு கிடைத்த கல்வி வாய்ப்புகளை பயன்படுத்தி முன்னேறி வருவதை ஆதிக்க சாதியினரால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. தங்களுக்கு கீழே இருந்தவன் மேலே செல்வதைப் பார்க்கும்பொழுது ஏற்படுகின்ற பயம் தான் இவ்வாறெல்லாம் கயிறு அணிதல், சாதிய அடைமொழி இட்டுக்கொள்ளுதல் என்பனவாக வெளிப்படுகின்றன .

**எதிரொலி : இந்தப் பயத்திலிருந்து மாற்றம் ஏற்பட்டு காலப்போக்கில் சாதிய ஒடுக்குமுறைகள் குறையும் என்று சொல்கிறீர்களா ?**

**பெ.மு :** மரத்தில் கட்டிவைத்து சாணியை கரைத்து ஊற்றுதல், பண்ணை அடிமை முறை போன்ற முன்பிருந்த சாதிய ஒடுக்குமுறைகள் எல்லாம் ஒழிந்துவிட்டன . கட்டாயம் இந்தப் பயம் அடுத்தடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும். சாதிய ஒடுக்குமுறைகள் அறவே ஒழியும் வாய்ப்பு இருக்கிறது என்றே சொல்ல முடியும் .

**எதிரொலி : அப்படியே நடக்கவேண்டும். அதுவே எல்லோரின் ஆசையும் கூட. உங்களின் கட்டுரைத் தொடர்களையெல்லாம் படித்ததில்லை. ஆனால் உங்களின் தளத்தில் சில கட்டுரைகளை படித்திருக்கிறேன் .உங்களின் வான்குருவியின் கூடு என்ற தனிப்பாடல்கள் திரட்டு பற்றிய மிக நல்ல புத்தகம். கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் , ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது போன்ற சொற்றோடர்கள் தனிப்பாடல்களிருந்து வந்தவையே என்பது புதிய செய்தியாகும். அது போன்று வேறு புத்தகங்கள் எழுதும் திட்டம் இருக்கிறதா?**

**பெ.மு :** இல்லை. அது போன்று தொடர்ந்து எழுத வேண்டுமென்று ஆசை .ஆனால் புனைவில் கவனம் செலுத்தியதால் தனிப்பாடல்கள் குறித்து நூறு கட்டுரைகள் எழுதும் திட்டம் நிறைவேறவில்லை.பார்க்கலாம் .எதிர்காலத்தில் எழுதமுடியுமா என்று பார்க்க வேண்டும்

**எதிரொலி : தமிழ் சினிமா திரையரங்குகள் குறித்து நிழல் முற்றம் மற்றும் நிலமும் நிஜமும் படைப்புகளை எழுதியிருக்கிறீர்கள். தமிழ்ப்பாடல்கள் குறித்து எழுதவேண்டுமென்று திட்டமிருக்கிறது என்று கூறியிருந்தீர்கள் .**

**பெ.மு :** ஆம் .இருக்கிறது. காலம் கனிந்து வரும்போது எழுதுவேன்.

**எதிரொலி : இப்பொழுது வேறு எதாவது நாவல் எழுதுகிறீர்களா ?**

**பெ.மு:** இல்லை. இப்போது நாவல் எழுதவில்லை. சிறுகதைகள் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**எதிரொலி : கடைசியாக மிகச் சம்பிரதாயமான கேள்வி. ஆஸ்திரேலியாவிற்கு முதன்முறையாக வந்திருக்கிறீர்கள். நீங்கள் பொதுவாக நிலத்தை பற்றி கூர்ந்து கவனித்து எழுதுபவர். ஆஸ்திரேலிய நிலத்தில் பயணிக்கும் போது இந்த நிலத்தை என்னவாக உணர்கிறீர்கள் ?**

**பெ.மு :** ஆம். இதுவே முதல்முறை. ஆனால் இந்தப் பயணத்தில் நகர்ப்புறத்தில் மட்டுமே சுற்றியிருக்கிறேன். இந்த பயணத்தில் செல்லும் போது மேய்ச்சல் நிலங்கள், ஆடுகள், மாடுகள், குதிரைகள் மற்றும் மேடு பள்ளங்கள் சார்ந்த நிலத்தை பார்த்துக்கொண்டே பயணித்து வந்திருக்கிறேன். இந்த நிலத்தை கீழிறங்கி நேரிடையாக பார்க்கும் வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லை. மிகப்பெரிய நிலப்பரப்புடைய நாடு ஆஸ்திரேலியா. அதனைப் பார்க்கும் பொழுது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# குடும்பங்களைக் குலைக்காதீர்!

ஆஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர் தேசத்தவர்கள் மத்தியில் குடும்ப வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. தாயகத்தில் குடும்ப வன்முறை ஏற்பட்டால் கூட அந்தப்பிரச்சினை பொலிஸ் நிலையம் வரை செல்வது அரிது. குடும்பப் பிரச்சினையை படி தாண்டவிடாது உறவுகள் தீர்த்துவைப்பார்கள். தம்பதியினருக்கிடையில் சண்டை ஏற்பட்டால் ஓரிரு நாட்கள் பிரிந்து உறவுகளின் வீட்டில் வாழ்வார்கள், பின்னர் சங்கமித்து விடுவார்கள்.குடும்பங்களின் மகிழ்ச்சிக்கும், அவற்றின் பிரிவில்லாத நீடிப்புக்கும் சொந்தபந்தங்களும், அக்கம் பக்கத்தினரும் துணைநிற்பார்கள். தேவையான ஆலோசனைகளை வழங்கி அந்தக் குடும்பங்கள் சரியானபடி வாழ வழிசமைப்பார்கள்.

ஆனால் புலம்பெயர் தேசத்தில் நிலைமை அவ்வாறு அல்ல. பக்கத்து வீட்டில் யாரோ எவரோ இருப்பார்கள். எவருக்கும் எதுவும் தெரியாது. ஒவ்வொரு குடும்பமும் வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட தனித் தனி தீவுகள் போலவே தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அவரவர் இன்ப, துன்பத்தை அவரவரே தமக்குள் சுமக்க வேண்டியதுதான். அவற்றைப் பகிரவோ, அறிவுரை சொல்லவோ யாரும் இருக்கமாட்டார்கள். இவ்வாறு தொடர்ச்சியாக நிகழும் போது அடக்கிவைக்கப்பட்ட உணர்வுகள் திடீரென ஒருநாள் பூதாகரமாக வெடிக்கும். அந்த வெடிப்பு குடும்பங்களின் நிரந்தரப்பிரிவு வரை கொண்டு செல்லவும் கூடும். சிலவேளைகளில் விபரீதமான முடிவுகளுக்கும் இந்த நிலைமை வித்திடலாம். இதற்கு சமீபத்த்ய உதாரணம், விக்டோரிய மாநிலத்திலுள்ள குப்பைத் தொட்டிக்குள் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட இந்தியப் பெண்.

36 வயதேயான சைதன்யா மதகனி என்ற அந்த இந்தியப் பெண் இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஹைதாரபாத்தை பூர்வீகமாகக் கொண்டவர். விக்டோரிய மாநிலத்தில் தன் கணவருடனும், மகனுடனும் அவர் மகிழ்ச்சியாகத்தான் வாழ்ந்தார். யார் கண்பட்டதோ தெரியவில்லை. திடீரென ஒருநாள் பக்லி என்ற பகுதியில் இருந்த குப்பைத் தொட்டிக்குள் அவர் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார். அவரைப் பற்றி விசாரிக்க வீட்டுக்குச் சென்ற பொலிஸாருக்கு அதிர்ச்சி. அங்கே சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கணவனும், மகனும் காணாமல் போயிருந்தனர். தீவிர விசாரணையின் பின்னரே சில உண்மைகள் வெளியில் வந்தன. மகிழ்வாக இருந்த குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடே கொலைவரை சென்றுள்ளது. சைதன்யா மதகனியின் கணவர் அவளைக் கொன்று குப்பைத் தொட்டிக்குள் வீசிவிட்டு, மகனையும் அழைத்துக்கொண்டு இந்தியாவுக்குப் பறந்து சென்று தலைமறைவாகிவிட்டார். இப்படி மிகமோசமான, உயிரையே பறிக்குமளவுக்கான குடும்ப வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றாலும், வெளியே தெரிய வருபவை மிகச் சொற்பமே.

ஆஸ்திரேலியாவில் 2023 ஆம் ஆண்டில் மட்டும்குடும்ப வன்முறைகளில் 64 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர் .இவ்வாறு குடும்ப வன்முறைகளாலும், ஏனைய வன்முறைகளாலும் பெண்கள் கொலை செய்யப்படுவது அதிகரித்து வருகின்றது என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே, பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், வன்முறைகளில் இருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் பெண் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தக் குடும்ப வன்முறைகள் அதிகளவில் இடம்பெறுவது , புலம்பெயர் மக்கள் மத்தியில் தான். ஏனெனில் சொந்த ஊரில் இனசனத்தோடு வாழ்ந்துவிட்டு, திடீரென ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர்களால் தனிமையான புதிய சூழலை எதிர்கொள்வதென்பதும், அதற்கு இசைவாக்கம் அடைவதென்பதும் எளிதல்ல. இந்த அல்லாட்டம் குடும்பத்திலும் தாக்கம் செலுத்த, நாளும் பொழுதும் சிறுசிறு சச்சரவுகள் ஏற்பட்டு இறுதியில் குடும்பமே பிரிந்து செல்வது சகஜமாகி விட்டது. அப்படியொரு சம்பவம் அண்மையில் நடந்துள்ளது.

இலங்கையில் இருந்து கணவர் ஆஸ்திரேலியாவுக்கு வந்ததால், சுமார் 11 வருடங்கள் தன் மகள் மட்டுமே உலகமென வாழ்ந்து வந்தவர் அந்தப்பெண். இருப்பினும் அவர் தனிமையை உணராவண்ணம் அவருக்கு பெற்றோரும், உற்றோரும் துணைசெய்தனர். கணவர் அனுப்பும் பணத்தை வைத்து மகளைக் கற்பித்து , குடும்ப விவகாரங்களில் தனித்து முடிவெடுக்கும் மனோதைரியமும் கொண்டவராக அந்தப் பெண் மாறினார். 11 வருடங்களாக கணவருடனான தொலைபேசி உரையாடல் மட்டுமே அவருக்கும் கணவருக்குமான ஒரேயொரு இணைப்புப்பாலம். காலம் கனிந்தது. ஆஸ்திரேலிய அரசு மனமிளகியது. அந்தப் பெண் , மகளையும் அழைத்துக்கொண்டு ஆஸ்திரேலியாவுக்கு குடும்ப விசாவில் வந்தார். 11 வருடங்களாக பிரிந்திருந்த குடும்பம் இணைந்து, ஆஸ்திரேலியாவில் மகிழ்ச்சியோடு வாழ்வின் அடுத்த அத்தியாயத்தை தொடங்கியது. ஆனால் அந்தச் சந்தோஷம் அதிககாலம் நீடிக்கவில்லை.

11 வருடம் ஊரில் இருந்துவிட்டு இப்போது ஆஸ்திரேலியாவுக்கு வந்த மனைவியை குறையில்லாமல் வாழவைக்க நினைத்தார் கணவர். சிட்னியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில், புதிய வீட்டை வாடகைக்கு எடுத்தார். அந்த வீட்டுக்குத் தேவையான எல்லாச் சாமான்களையும் வாங்கிக் குவித்தார். ஆனால் இப்படியான செலவுகளை ஈடுகட்ட அவர் இரண்டு வேலைகளுக்கு ஓய்வு ஒழிச்சலின்றி போகவேண்டிய கட்டாயம். அப்படி அவர் வேலையே கதியென்று இருந்ததால் மனைவி வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டியேற்பட்டது. அவர் நினைத்ததைப் போல ஆஸ்திரேலியாவைச் சுற்றிப்பார்க்கவோ, குடும்பமாக சுற்றுலா போகவோ முடியவில்லை. மெல்ல மெல்ல இருவருக்குமிடையே பிரிவு முளைத்தது. கணவன் மீது ‘ உங்களிடம் நண்பர்களிடம் இருப்பதைப் போல நல்ல கார் கூட இல்லையே’ என்பது போன்ற குறைகளை மனைவி சுமத்தத் தொடங்கினார். பதிலுக்கு வேலை செய்த களைப்பில் கணவனும் வார்த்தைகளைக் கடுமையாக்க, தினமும் சண்டையும் சச்சரவும் அந்தக் குடும்பத்தில் நிலைகொள்ளத் தொடங்கின.

இதுபோதாதென்று, அவர்களின் வீட்டுக்கு அருகில் இருக்கும் ஒரு நடுத்தரவயது அன்ரி ஒருவரும் இந்தக் குடும்பத்துப் பெண்ணின் மனதில் இன்னும் வன்மத்தை தூண்டினார். ‘பொலிஸுக்கு அறிவித்தால் தான் உன் கணவரின் கொடுமைக்கு முடிவுகட்டலாம்’ என்று குடும்பத்தை இன்னும் பிளவுபடுத்தும் வழிகளைச் சொன்னார். ஆனால் அந்தப்பெண் அப்படியான வழிமுறைகளுக்குச் செல்லவில்லை. இதனால் அந்த நடுத்தர வயது ‘அன்ரி’ தானாகவே பொலிஸிக்கு அழைப்பெடுத்து, ‘என் தோழியை அவரது கணவர் கத்தியோடு சென்று மிரட்டுகிறார்’ என்று முறைப்பாடு செய்துள்ளார். அதன் விளைவாக சந்தோஷமாக வாழவேண்டிய அந்த இளம் குடும்பம் இப்போது விவகாரத்துக்காக 25 ஆயிரம் டொலரோடு சட்டத்தரணிகளைத் தேடத் தொடங்கியுள்ளது.

இந்தச் சம்பவம் ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் மட்டுமே.இப்படி பல வீடுகளில் குடும்ப வன்முறைகள் நடந்துகொண்டே இருக்கின்றன. அதை அணைக்காமல், ஊதி ஊதி எரியவிட்டுக் குளிர்காய்வதிலும் சிலர் சுகம் காணுகிறார்கள். குடும்பங்களுக்கிடையிலான நீண்ட காலப் பிரிவு அவர்களுக்கிடையிலான புரிந்துணர்வில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும். அதேபோல கணவன், மனைவி சுயமாக முடிவெடுக்கும் விதத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கும். இவ்வாறானவர்களுக்கு ஆஸ்திரேலிய அரசு பல மனநலத்திட்டங்களை இலவசமாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

நகத்தால் பறிக்கக்கூடிய பூவை, கோடரி கொண்டு வெட்டுவதுபோல நாரதர் வேலை செய்து, குழப்பி, கும்பியடித்து, அடுத்தவர் கண்ணீரில் சுகம் தேடநினைப்போர், குடும்ப வன்முறை ஏற்படாமல் இருப்பதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் பற்றி தெளிவுபடுத்தினால் அவர்களும் நிம்மதியாக வாழலாமே.





பாரதி பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி மார்ச் 17ம் திகதி, மெல்பனின் சிறப்புமிக்க விளையாட்டரங்கான Bill Stewart Athletics Trackஇல் முழு நாள் நிகழ்வாக இடம்பெற்றது. கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே நடந்த பலத்த போட்டியில், இளங்கோ இல்லம் 218 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது. வள்ளுவர், கம்பர் இல்லங்கள் முறையே 193, 124 புள்ளிகளைப் பெற்றன. பாரதி பள்ளியின் முப்பதாண்டு நிறைவை ஒட்டி நடந்த விளையாட்டுப் போட்டி என்பதால், பிள்ளைகளும் வளர்ந்தோருமாக ஆயிரம் பேர் அளவில் பங்குபற்றியிருந்தனர்.


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
CCTV INSTALLATION
INTERCOM DOORBELL
TV WALL MOUNT INSTALLATION
TV ANTENNA
AMPLIFIER SPEAKERS
WASHING MACHINE AND DISHWASHER. INSTALLATION
SOLAR CLEANING, BIRD REFLECTOR
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 1800 960 162


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

# அரசியல் சேற்றுக்குள் முத்தெடுத்தல்

● கருணாகரன்



**2024** இல் ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா? நாடாளுமன்றத் தேர்தல் நடக்குமா? என்று இன்னும் உறுதியாகச் சொல்ல முடியாத நிலையே உள்ளது. ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடக்கும் என சில இடங்களில் சொல்லப்படுகிறது. ஆனால், அதற்கு முன்பு நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது நல்லது என்று பொதுஜன பெரமுன உள்ளிட்ட சில தரப்புகள் வலியுறுத்துகின்றன. எதையும் தீர்மானிக்கின்ற ஒரே மனிதராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார்.

இலங்கை அரசியல் யாப்பின்படி ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தை உச்சமாகப் பயன்படுத்தியவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன. அவரே ஜனாதிபதிக்கான அதிகாரங்களை உருவாக்கியவர். அவருக்கு அடுத்தபடியாக அதனுடைய சுவையறிந்து செயற்பட்டுக் கொண்டிருப்பவர் ரணில் விக்கிரமசிங்க. இருவரும் உறவினர்கள் மட்டுமல்ல, ஒரே மாதிரிச் சிந்திப்பவர்களும் செயற்படுகின்றவர்களும். இதனால் இருவரும் தந்திரமிக்கவர்கள் (நரித்தனமுள்ளவர்கள்) எனச் சொல்லப்படுவதுண்டு. இருவருக்கும் ஒரேயொரு வித்தியாசம். ஜே.ஆர், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தோடு ஆட்சி நடத்தியவர். அந்தப் பலத்தைப் பயன்படுத்தி எதிர்த்தரப்புகளின் முதுகெலும்பை உடைத்தவர். தன்னுடைய கட்சிக்காரர்களின் ராஜினாமாக் கடிதத்தை வாங்கிப் பொக்கற்றுக்குள் வைத்துக் கொண்டு முழுமையான நிறைவேற்று அதிகாரத்துக்கு அப்பாலும் செயற்பட்டவர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறிய - சாதாரண பெரும்பான்மை கூட ஆட்சியில் இல்லை. அவர் ஜனாதிபதியாகிய விதமே - விந்தையே வேறுவிதமானது. யானை மாலை போட்டதால் ராணியாகியதைப்போல, ராஜபக்ஸவினரின் கூட்டுத் தவறுகளின் விளைவாகவும் ஏனைய அரசியல் தலைவர்களின் பலவீனங்களுக்குள்ளாலும் மேலெழுந்து ஜனாதிபதியானவர். இதனால் கேள்விக்கிடமற்று முழுமையான நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தும் ஆளாக மாறியிருக்கிறார் ரணில்.

ஆகவே இப்பொழுது ரணில் மிக வலுவான யானையாக உள்ளார். ஆனால், தேர்தலில் இந்த யானைப் பலம் அவருக்கு இருக்குமா? இல்லையா என்பது கேள்வியே. என்பதால்தான் எந்தத் தேர்தல் முதலில் வரும் என்று உறுதியாகச் சொல்ல முடியாதுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் தேர்வு எதுவோ அதுவே நடக்கப்போகிறது.

எப்படியிருந்தாலும் 2024 தேர்தல் ஆண்டாக அமையும் என்று நம்பிக்கையாகச் சொல்ல முடியும். இலங்கைத் தேர்தல் ஆணையகமும் இதை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தப் பின்னணியில்தான் - அதாவது ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானம் எப்படி இருக்கப்போகிறது என்பதைப் பொறுத்துள்ள சூழலில்தான் - இலங்கையின் அரசியற் செல்வழி அமையப்போகிறது. அதை மீறிச் செயற்படக் கூடிய நிகராற்றல் வேறெவரிடத்திலும் இல்லை. இதுதான் உண்மை நிலைவரம். கவலையும் கூட.

இதற்குள் அவரவர் தமக்கேற்ற விதத்தில் தம்மைத் தயார்ப்படுத்தத் தொடங்கியுள்ளனர். “எந்தத் தேர்தல் வந்தாலும் அதை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தயார்” என்று முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜனபெரமுனவின் தலைமைச் சக்தியுமாகிய மகிந்த ராஜபக்ஸ கூறியுள்ளார்.

இருந்தாலும் கடுமையான குழப்பத்தில் இருப்பது, ராஜபக்ஸக்களின் பொதுஜன பெரமுனவாகும். முதலில் நாடாளுமன்றத் தேர்தலையா அல்லது ஜனாதிபதித் தேர்தலையா எதிர்கொள்வது என்ற பதற்றத்தில் உள்ளது பெரமுன. ஜனாதிபதித் தேர்தல் என்றால் அதற்கு யாரை நிறுத்தலாம் என்ற குழப்பம் அதற்குள் நீடிக்கிறது. ராஜபக்ஸக்களின் கனவு நாயகன் நாமல் ராஜபக்ஸவை நிறுத்தலாம் என ஆரம்பத்தில் பேச்சடிபட்டது. பிறகு பஸில் ராஜபக்ஸவின் பெயரடிபட்டது. இப்போது அவர்கள் ரணிலையே நிறுத்தினால் என்ன என்று யோசிப்பதாகச் சொல்லப்படுகிறது.

அடுத்ததாக உள்ள ஐ.தே.க.வின் ஒரே தெரிவு ரணில் விக்கிரமசிங்கதான். அதற்குள் வேறு கவர்ச்சிகரமான ஆட்களில்லை. ஆனால் அதற்கு ரணில் தயாரா என்று தெரியவில்லை இன்னும். தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கு இன்னும் ஒரு நீண்ட கால அவகாசம் தேவைப்படுவதால் பெரமுனவினரும் (ராஜபக்ஸவினரும்) ரணிலையே விரும்புவதால் சிலவேளை இரு தரப்பின் வேட்பாளராக ரணில் போட்டியிடக் கூடும் - நிறுத்தப்படக் கூடும்.

இதற்குள் (இலங்கையின் தற்போதைய கையறு நிலையில்) தம்மை நிலை நிறுத்திக் கொள்ளலாம் என்று சிந்திக்கிறது தேசிய மக்கள் சக்தி என்கிற (மக்கள் விடுதலை முன்னணி) ஜே.வி.பி. அதற்காக அது தமிழ்ப்பரப்பிலும் தன்னுடைய செல்வாக்கு மண்டலத்தை விரிக்கப்பார்க்கிறது. கிளிநொச்சி தொடக்கம் கனடா வரையில் நிகழ்ந்துள்ள அநுர குமாரவின் பயணம் இதற்குச் சான்று.

ராஜபக்ஸவினரின் மீதான கசப்புணர்வு, நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி, நிறுத்தப்படாத ஊழல், மர்மமாக மேற்கொள்ளப்படும் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகார அரசியல் போன்றவற்றுக்கு மாற்றாகத் தம்மை நிறுத்தி விடலாம் என்று ஜே.வி.பி .சிந்திக்கிறது. இதற்கு அதனுடைய கவர்ச்சிகரமான தலைவரான அநுர குமார திஸநாயக்கவை நிறுத்தப் பார்க்கிறது.

இதற்கெல்லாம் அப்பால் ஐக்கிய மக்கள் சக்தி என்ற சஜித் பிரேமதாசவின் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணி சஜித் பிரேமதாசவை களமிறக்குவதற்குத் தயாராகியுள்ளது. இதற்கான உடன்படிக்கைகள் கூடச் செய்யப்பட்டுள்ளதாக நம்பகமான தகவல்கள் கிடைக்கின்றன.

இந்த நான்கு தரப்பின் மூன்று வேட்பாளர்களும் புதியனவற்றை இலங்கைத்தீவுக்குத் தருவார்கள் என்று நம்புவதற்கொன்றுமில்லை. ஜே.வி.பி.யிடமிருந்து சிறிய அளவில் மாற்றங்கள் ஏதும் நிகழலாம். அதுகூட இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் நிகழச் சாத்தியமில்லை. ஏனென்றால் அதற்கான இடம் ஜே.வி.பி.யின் இதயத்திலும் இல்லை. மூளையிலும் இல்லை. அதனுடைய கற்பனை வேறு விதமானது. இனவாதத்திலிருந்து மீண்டு விடாத சீர்திருத்தத்தையே அது கொண்டுள்ளது. மெய்யான மாற்றத்தை அல்ல. மாற்றம் போன்ற தோற்றத்தை.

ஆனால், சஜித், ரணில், ராஜபக்ஸவினரை விட வரலாறு அநுரகுமார விடம் அதிகமாக எதிர்பார்க்கிறது. வரலாற்றுச் சூழலும் அவருக்கு (தேசிய மக்கள் சக்திக்கு) வாய்ப்பாக உள்ளது. ஆனால் அதைப் புரிந்து கொண்டு சரியாகச் செயற்படுவதற்கு (துணிவாக முடிவெடுப்பதற்கு) அநுரகுமாரவும் தயாரில்லை. அவருடைய தேசிய மக்கள் சக்தியும் தயாராக இல்லை.

சஜித் பிரேமதாச தன்னை மிகத் தெளிவாகவே நிரூபித்து விட்டார். இனப்பிரச்சினைக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் எந்தப் பெரிய நன்மைகளையும் அளிக்கக் கூடிய வல்லமை எதுவும் தன்னிடமில்லை என. அவர் முல்லைத்தீவு - முறிகண்டிப் பகுதியில் அமைத்த முழுமையடையாத வீடுகள் இதற்குச் சாட்சியம்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. ஆனால் அவர்தான் மீட்பரைப்போலத் தோற்றம் காட்டிக் கொண்டிருப்பவர். அவரைக் கடந்து சிந்திக்கக் கூடிய - செயற்படக் கூடியவர் யாராவது வந்தால்தான் இலங்கையில் மாற்றம் நிகழும். அது அரசியல், பொருளாதாரம் எனச் சகல தளங்களிலுமாக இருக்கும்.

ஆனால் அப்படியான மூளையும் நல்லிதயமும் உள்ள எவரையும் அண்மையில் காண முடியவில்லை.

அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பதைப்போல, யாரும் எங்கிருந்தும் களமிறங்கலாம். அல்லது களமிறக்கப்படலாம். அப்படித்தான் முன்னர் எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில் சந்திரிகா குமாரதுங்க களமிறக்கப்பட்டார். 2010 இல் யாருமே எதிர்பாராத வகையில் சரத் பொன்சேகா நிறுத்தப்பட்டார். ஒரு இராணுவத்தளபதி ஜனாதிபதி வேட்பாளரா என்று பலரும் புருவத்தை உயர்த்தி, முகத்தைச் சுழித்தனர். ஆனால், சரத் பொன்சேகா ஐம்பது லட்சம் வாக்குகளைப் பெற்றார்.

அதற்குப் பிறகு 2015 இல் கோட்டபாய ராஜபக்ஸ கூட அப்படியான ஒரு தெரிவினால் நிறுத்தப்பட்டவரே. உண்மையில் தான் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவேன், அதில் மிகப் பெரிய வெற்றியைப் பெறுவேன், அந்த வெற்றியின் ருசியை அனுபவிக்க முன்பு பதவியிலிருந்து அவ்வளவு விரைவாக விரட்டப்படுவேன் என்று கோட்டபாய சிந்தித்திருக்கவே மாட்டார். அவ்வளவும் நடந்து முடிந்தன.

ஆகவே இவற்றைப்போல எதிர்பாராத விதமாக நம்முடைய அவதானத்துக்கு வெளியிலிருந்து வேறு யாரும் கூடப் புதிதாக களமிறக்கப்படலாம். அதற்கான வாய்ப்புகளும் உண்டு.

ஏனென்றால் இலங்கை அரசியல், அண்மைய ஆண்டுகளில் இலங்கையர்களால் தீர்மானிக்கப்படும் நிலையிலிருந்து விலகிப் பிற சக்திகளால் தீர்மானிக்கப்படுவதாக மாறியுள்ளது. குறிப்பாக, இந்தியா, சீனா, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஆகியன இதில் முழுதாக ஈடுபடுகின்றன. இவற்றின் சதுரங்க ஆட்டத்தின் விளைவுகளே இன்றைய இலங்கை, இன்றையை ஆட்சி, இன்றைய ஜனாதிபதி, இலங்கையில் உலக வங்கி உட்பட அனைத்தும்.

இதனுடைய தொடர்ச்சியாகவே இனிவரும் இலங்கையும் இருக்கும். அதற்கமைவாகவே ஆட்சியும் ஆட்சித் தலைவர்களும் தெரிவு செய்யப்படுவர். இந்தத் தரப்புகளின் விருப்பத்துக்கு மாறான தலைமைகள் அதிகாரத்துக்கு வந்தால் ராஜபக்ஸக்கள் எப்படி தூர விலக்கப்பட்டனரோ அவ்விதம் விலக்கப்படுவர். ஆகவே இங்கே தேர்தல், ஜனநாயகத் தெரிவு என்பதெல்லாம் வெறும் கனவே!

இந்த யதார்த்தத்தை உணராமல், யதார்த்தத்துக்கு வெகு தொலைவில் நிற்கிறது தமிழ்த் தேசியத் தரப்பு. அது எப்போதையும்போல ஜனாதிபதித் தேர்தலிலும் தவறைச் செய்யவே முனைகிறது. கடந்த 11.03.2024 இல் தமிழ்த் தேசியத் தரப்பினர் யாழ்ப்பாணத்தில் கூடி ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதைப் பற்றி யோசித்திருக்கின்றனர். இதன் காணொளியும் ’யூரியூப்’ பில் காணக்கிடைக்கிறது. அதைப் பார்த்தபோது “ஆண்டிகள் கூடி மடம் கட்டுவது” என்ற தமிழ்ப்பழமொழிதான் நினைவுக்கு வந்தது.

இந்த மாதிரியான உணர்ச்சிகரமான எதிர்மறைச் சிந்தனைகளால் தமிழ்ச்சமூகம் மிகப் பெரிய விலையைக் கொடுத்துள்ளது. குறிப்பாக சமானிய மக்கள்.

இலங்கைத்தீவின் அரசியல் யதார்த்தத்தை இன்னும் புரிந்து கொள்ளாத - புரிந்து கொள்ள விரும்பாதவர்களின் கோமாளி விளையாட்டு அது. இதனுடைய விபரீதம் சாதாரணமானதல்ல. மேலும் சிங்களப் பேரினவாதத்தைக் கூர்மைப்படுத்தும் முட்டாள்தனமான யோசனை அது.

புதிதாகச் சிந்திக்க முடியாதவர்களாக இருந்தாலும் பரவாயில்லை. வரலாற்றிலிருந்தும் சொந்த அனுபவங்களிலிருந்தும் கூட எதையும் கற்றுக் கொள்ள முடியாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்பது எவ்வளவு துயரமானது!

தமிழ் வேட்பாளர் என்பது ஒன்றும் புதியதல்ல. முன்னர் குமார் பொன்னம்பலம் அப்படி நின்றார். பிறகு சிவாஜிலிங்கம். தமிழ் வாக்குகளின்றியே ஒருவர் ஜனாதிபதியாக வர முடியும் என்பதற்கு கோட்டபாய ராஜபக்ஸ உதாரணம். எந்த வாக்குகளுமின்றியே ஒருவர் ஜனாதிபதியாக முடியும் என்பதற்கு ரணில் விக்கிரமசிங்க எளிய சான்று. இந்த நிலையிற்தான் தமிழ் வேட்பாளர் பற்றிய சிந்தனை இருக்கிறது. குறைந்த பட்சம் மலையக, முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய தமிழ் பேசும் தரப்பிலிருந்து ஒரு வேட்பாளர் என்று சிந்தித்தாற் கூடப் பரவாயில்லை.

ஆக மொத்தத்தில் தேர்தலுக்கு முன்பே தேர்தற் களம் சேற்றுக் குழியாகக் கிடக்கிறது. இதற்குள் முத்தெடுப்பது எப்படி இலங்கை மக்கள்? ■

# அகம், புறம், சங்க(ம)ம்

## நறியவும் உளவோ நீயறியும் பூவே – (பூவையரின் மன(ண)ம்)



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு வந்த புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர் பெருமாள் முருகன் சிட்னியில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பு நிகழ்வில் 'புனைவும் - அபுனைவும் 'என்ற தலைப்பில் ஒரு மிகச்சிறந்த உரையாற்றினார்.

அந்த உரையில் புனைவைப் பற்றிக் குறிப்பிடும் போது, மு.வரதராசனார் எழுதியுள்ள கொங்குதேர் வாழ்க்கை என்ற புத்தகம் இறையனார் எழுதிய குறுந்தொகைப் பாடலைப் பற்றியது என்று கூறிவிட்டு அந்த முழுப்பாடலுக்கும் விளக்கம் அளித்தார். பெருமாள் முருகன் அவர்களிடம் தமிழ் கற்றவர்கள் பெரும்பேறு பெற்றவர்கள். வேறு என்ன சொல்ல முடியும்?

சங்கப்பாடல்களை படிக்கும் முறை குறித்து அவர் கூறியபோது எவ்வாறு தொடங்கவேண்டும் என்று குறிப்பிட்டார் . திணை ,துறை, கூற்று பற்றி முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.திணை என்பதற்கு இடம், வீடு, குலம், ஒழுக்கம், பிரிவு என்று பல்வேறு பொருள்கள் உண்டு. இலக்கியத்தில் திணை என்பது ஒழுக்கம், பிரிவு என்ற பொருளில் வந்துள்ளது. மக்கள் கொள்கின்ற ஒழுக்க முறைமையே திணையாகும். அகநானுற்றில் ஏழு திணைகள் அதாவது குறிஞ்சி, முல்லை , மருதம் , நெய்தல், பாலை , கைக்கிளை மற்றும் பெருந்திணை என்பன குறிப்பிடப்படுகின்றன.துறை என்பது ஒரு சிறிய பிரிவு அல்லது உட்பிரிவு எனக் கொள்ளலாம். தொல்காப்பியத்தில் துறை



என்பது திணையின் பல பகுதிகளில் ஒன்றாகவும் வகை என்பது அப்பகுதிகள் பலவற்றை உட்கொண்டதாகவும் விளங்குகின்றன. கூற்று என்பது பாடலை யார் பாடுகிறார் , பாடல் யாரால் பாடப்படுகிறது என்பதாகும். திணை ,துறை, கூற்று கொண்டே சங்கப்பாடல்களை நாம் அறிந்துகொள்ள முடியும். இல்லையேல் பாடலின் முழுப்பொருளும் ,சுவையும் நமக்கு கிடைக்காமல் போகும் வாய்ப்பு அதிகம் .

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்



நறியவும் உளவோ நீயறியும் பூவே
- இறையனார்

இப்பாடலின் திணை குறிஞ்சித் திணை - தலைவனும் தலைவியும் களவுக் காதலில் கூடி மகிழும் ஒழுக்கத்தைக் கூறுவது குறிஞ்சித் திணைப் பாடல்கள். பாடலின் துறை - நலம் பாராட்டல் அதாவது பிணக்கு ஏற்பட்டு நாணும் தலைவியை வியந்தோம்புதல். பாடலின் கூற்று - தலைவன் கூற்று , அதாவது தலைவன் தலைவியை நோக்கி பாடியது.

கொங்கு- பூவின் மகரந்தம்
தேர்- தேர்ந்தெடுத்து
வாழ்க்கை-வாழும்
அஞ்சிறைத்தும்பி-உள்ளே சிறகுகளை உடைய தும்பி(வண்டு)-(அம் சிறை -அழகிய சிறகுகள்)
காமம் செப்பாது -நான் விரும்பியதைச் சொல்லாது
கண்டது மொழிமோ-நீ கண்டறிந்ததைக் கூறு
பயலியது கெழீய நட்பின் - பல பிறவிகளிலும் நட்புடன் விளங்கும்(கெழி-நட்பு)
மயிலியல்-மயில் போன்ற
செறியியெற் றரிவை- செறிவான பற்களைக்(எயிறு) கொண்ட பெண்
கூந்தலின்-கூந்தலை விட
நறியவும் உளவோ- மணமிகுந்த ஏதேனும் உள்ளதோ
நீ அறியும் பூவே- நீ அறிந்த பூக்களிடம்

மலர்களிலிருந்து மகரந்தங்களை சேகரித்துண்டு வாழும் அழகிய சிறகுகளை உடைய வண்டே ! (தும்பி). நீ எத்தனையோ பூக்களின் மணத்தை அறிவாய். என்னுடனே பல பிறப்புகளில் தொடர்ந்து நட்புடன் பழகி வரும், மயில் போல் அழகிய பற்களை உடைய என் தலைவியின் கூந்தலைவிட நறுமணமுடையது ஏதேனும் இந்த உலகத்தில் உள்ளதோ? தேனின் மேல் மையல் கொள்ளாமலும் , எனக்குப் பிடித்ததைக் கூறாமலும் - நீ அறிந்ததை மட்டும் கூறுவாயாக!

இந்தப் பாடலை இயற்றிய புலவரின் பெயர் இறையனார். இப்பாடல் சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூல்களில் "குறுங்தொகை' நூலில் இரண்டாவது பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது.இப்பாடலின் கீழே காணப் பெறும் பழங்குறிப்பு "இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடு பட்டு நின்ற தலைமகன் தலைமகளை நாணின் நீக்குதற் பொருட்டு மெய் தொட்டுப்பயிறல் முதலாயின அவன் மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்பு தோற்ற நலம் பாராட்டியது' என்று காணப் படுகின்றது. அதாவது தலைவன் தலைவியின் காதல் புரியும்போது அவள் நாணி ஓடுகின்றாள். அப்பொழுது அவளிடம் நெருங்கி வந்த தலைவன் அவளது நாணத்தை போக்க வண்டினை துணைக்கு அழைத்து தலைவியை போற்றிப்புகழ்ந்து பாடுகின்றான்.

இந்தப் பாடல் நாம் அனைவருமறிந்த "திருவிளையாடல்' எனும் புராணப்படத்தில் தருமி (நாகேஷ்) என்ற புலவருக்கு, இறைவனான் சிவபெருமான் (சிவாஜிகணேசன்) எழு



தித் தருவதாக அப்படத்தின் இயக்குநர் ஏ.பி. நாகராஜன் காட்சியை அமைத்திருப்பார்.இந்தக் குறுந்தொகைப் பாடலை எழுதியவரின் இறையனார் என்ற பெயர் சிவபெருமானைக் குறிப்பதாக இருக்கலாம் எனக் கருதி இப்பாடலை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம். இங்கே நாம் அந்தப்பட இயக்குநரின் புத்திசாலித்தனத்தை அறிந்து கொள்ளலாம் .

இந்தக் குறுந்தொகைப் பாடல் மூலம் எந்தக் காலத்திலும் தலைவி பிணக்கு ஏற்பட்டு செல்லும்போது தலைவன் இப்படி ஏதாவது இல்லாததையெல்லாம் சொல்லி புகழ்ந்து மட்டுமே சாந்தப்படுத்த முடியும் என்பதை இறையனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவாக சொல்லியிருக்கிறார் என்பதே செப்பாது கண்டது மொழிமோ. ■



# புதுவருட ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் உயர்வான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தை பொறுத்தவரை எதிர் பார்த்ததை விட அதிகமான பண வரவு ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கணவன் மனை விக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். வேலைச்சுமை அதிகமாகவே இருக்கும். புதிதாக வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு துர்க்கை அம்மனை வழிபட வேண்டும்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சாதகமான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தை பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். முறையான உடற்பயிற்சி மற்றும் தியானம் செய்வதன் மூலம் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். கணவன்– மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். குடும்ப விஷயத்தில் மூன்றாவது நபரின் தலையீட்டைத் தவிர்ப்பது நன்மையைத் தரும். வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முயற்சிகள் வெற்றி அடையும் மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்ததை விட அதிகமான பண வரவு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. உடல் நலனில் சிறு சிறு உபாதைகள் ஏற்பட்டு நீங்கும். கணவன்– மனைவிக்கு இடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை அதிகரிக்கும். எந்த ஒரு முடிவையும் எடுப்பதற்கு முன்பு வீட்டில் இருக்கும் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு எடுப்பது நன்மையை தரும். வேலையைப் பொறுத்தவரை வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு மகாவிஷ்ணுவை வழிபட வேண்டும்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பொறுமையாகச் செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத் தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்குப் பணவரவு ஏற்படாது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் –மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நன்மையைத் தரும். வேலையைப் பொறுத்தவரை வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு மாரியம்மனை வழிபட வேண்டும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் திருப்திகரமான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்பட்டாலும் திடீர்ச் செலவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் ஒரு சிலர் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கணவன் –மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். ஒரு சிலருக்கு எதிர்பார்த்த சுப நிகழ்வுகள் வீட்டில் நடைபெறும். வேலையைப் பொறுத்த வரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு குலதெய்வத்தை வழிபட வேண்டும்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நிதானமாகச் செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்ததை விட அதிக அளவு பணவரவு ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கணவன் –மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். எந்த ஒரு முடிவையும் அவசரப்பட்டு எடுக்காமல் நிறுத்தி நிதானமாக யோசித்து எடுப்பது நன்மையைத் தரும். திருமண முயற்சிகள் வெற்றி அடையும். வேலையைப் பொறுத்தவரை வேலைச்சுமை குறைய ஆரம்பிக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு முருகப்பெருமானை வழிபட வேண்டும்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை. கணவன்– மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். பயணங்களை மேற்கொள்ளும் பொழுது கவனமாக இருக்க வேண்டும். வேலையைப் பொறுத்தவரை நிதானமாகச் செயலாற்றுவது நன்மையைத் தரும். தங்களின் வேலையைத் தாங்களே பொறுப்புடன் செய்து முடிப்பதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு சனி பகவானை வழிபட வேண்டும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் தைரியத்துடன் செயலாற்றும் மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்பட்டாலும் செலவுகளும் அதிகமாகவே இருக்கும். உடல் நலம் சீராக இருக்கும். கணவன்– மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். வேலையைப் பொறுத்தவரை வேலைச்சுமை சற்று கூடுதலாகவே இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு பெருமாளை வழிபட வேண்டும்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கோபத்தைத் தவிர்க்க வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்ததை விட அதிகமான பண வரவு ஏற்படும். அதே சமயம் செலவுகளும் அதிகமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கணவன் –மனைவிக்கு இடையே ஒற்றுமை அதிகரிக்கும். வேலையைப் பொறுத்தவரை வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு விநாயகப் பெருமானை வழிபட வேண்டும்.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் அதிர்ஷ்டகரமான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவைவிட அதிகளவு பண வரவு ஏற்படும். வராது என்று நினைத்த பணமும் வந்து சேரும். உடல் நலனில் சிறு சிறு உபாதைகள் ஏற்பட்டு நீங்கும். கணவன்– மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். ஒரு சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம் ஏற்பட வாய்ப்புகள் இருக்கிறது. வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத்திகழ்வதற்கு பிரத்தியங்கரா தேவியை வழிபட வேண்டும்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் உற்சாகத்துடன் செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். ஒரு சிலருக்கு விபரீத ராஜயோகம் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன்– மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். பணரீதியான பரிவர்த்தனை செய்யும் பொழுது கவனமாகக் கையாள வேண்டும். வேலையைப் பொறுத்தவரை வேலைச்சுமை அதிகமாகவே இருக்கும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் வெற்றிகள் நிறைந்த மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும்.

இருப்பினும் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கணவன் –மனைவிக்கு இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை அதிகரிக்கும். வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு வாராகி அன்னையை வழிபட வேண்டும்.

KALI MATHA ASTROLOGY CENTRE
MASTER KALIDAS

- Husband & Wife
- Children Education
- Overseas Travel
- Love Problem
- Property & Court Matters
- Job Problems
- Health Problems
- Jealousy
- Business
- Bad Luck
- Evil Affection
- Enemy Problem
- Marriage Problem

AN EXPERT ASTROLOGER FROM INDIA HAS SERVICED MANY COUNTRIES
100% RESULT
SPECIALISED IN GIVING PROTECTION
- FACE READING
- HAND READING
- DATE OF BIRTH
OPEN 7 DAYS 9am-7pm
ALL RELIGIONS ARE WELCOME

IF YOU HAVE PROBLEMS, I HAVE 100% GUARANTEED SOLUTIONS
Meet one time & see your future changing 100%
Meet the master to find all your answers and get solutions for your life
WORLD FAMOUS ASTROLOGERS FROM INDIAN 9GENERATIONS & INTERNATIONAL SPIRITUAL HEALERS

WHO INHERITED ASTROLOGIST PRACTICE PASSED DOWN FROM GENERATIONS. HE WILL HELP IN ALL PROBLEMS AND WORKS WITH GODS AND GODDESS.
MASTER IS AN EXPERT IN:
Palm Reading, Face Reading, Photo Numerology, Name, Date of Birth Reading, Horoscope, 100 Years Shatabdi Panchangam, Lucky Stones & Vastu Shastra
He is specialized in giving protection by performing Poojas and Devi upasane. He performs all types of poojas for all problems

Call for 100% Confidential Appointment
0415 327 306 / 0415 599 857


இன்றைக்கு
என்ன நாள்
என்ற கட்டம்
விக்டோரியாவின் குளியல் அனுபவங்கள் வீட்டிலிருந்து ஒரு குறுகிய பயணமே, ஆனால் நிஜ உலகில் இருந்து ஒளி ஆண்டுகள் தொலைவில். அந்த அதிசய உணர்வால் அச்சம்கொள்ள வேண்டாம் – உங்கள் உள அழுத்தம் உருகி ஓடும் உணர்வே அது.
ஆல்பா தெர்மல் ஸ்பிரிங்ஸ் & ஸ்பா போன்ற புத்துயிர்ப்பூட்டும் இடங்களில் ஓய்வுபெறுங்கள்.
VISITVICTORIA.COM
VICTORIA
ஒவ்வொரு கட்டமும் வித்தியாசம்

Transco™ CARGO

=




# ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

*We love to deliver*

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU